To Preliminary expenses written off	3,000		
To Net profit	24,420		
	4,63,350		4,63,350

In the cost accounts :

(a) Factory expenses have been allocated to production at 20% of Prime Cost.

(b) Administration expenses at ₹ 4.50 per unit produced.

(c) ₹ 6 per unit sold for selling expenses.

Prepare costing P & L account of the company and reconcile the profits disclosed by cost accounts and those by financial accounts.

2018ம் ஆண்டு டிசம்பர் 31ல் முடியும் ஆண்டிற்கான A ஆண்டு கோவின் வியாபார, இலாப நட்டக் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.

விவரம்	₹	விவரம்	₹
மூலப்பொருட்கள்	2,00,700	விற்பனை (6,000 அலகுகள்)	4,50,000
கூலி	1,10,550	முடிவுற்ற பொருட்கள்	
ஆலைச் செலவுகள்	60,750	(200 அலகுகள்)	12,000
நிர்வாகச் செலவுகள்	28,680	பங்காதாயம் பெற்றது	1,350
விற்பனைச் செலவுகள்	33,750		
நற்பெயர் போக்கெழுதியது	1,500		
தொடக்கச் செலவுகள் போக்கெழுதியது	3,000		
நிகர இலாபம்	24,420		
	4,63,350		4,63,350

அடக்கவிலையில் :

(அ) அடக்கவிலைக் கணக்கில் ஆலைச் செலவுகள் முதன்மை அடக்கவிலையில் 20% ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(ஆ) உற்பத்தி செய்யப்பட்ட அலகு ஒன்றிற்கு ₹ 4.50 நிர்வாகச் செலவாக மீட்கப்பட்டது.

(இ) விற்பனை செய்யப்பட்ட ஒவ்வொரு அலகிற்கும் ₹ 6 வீதம் விற்பனை செலவு மீட்கப்பட்டது.

அடக்கவிலை இலாப நட்டக் கணக்கினை தயார் செய்து, அடக்கவிலை கணக்கும், நிதிநிலை கணக்கும் வெளிப்படுத்தும் இலாபத்தினை சரிகட்டுக.

———————

D–1288

Sub. Code
10254/12554/ 12354/12854

DISTANCE EDUCATION

Common for B.Com/B.Com (L.E)/B.Com (CA)/B.Com (CA) (L.E)
DEGREE EXAMINATION, MAY 2023.

Fifth Semester

PROJECT MANAGEMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL questions.

1. What you mean by project life cycle?
திட்ட ஆயுள் சுழற்சி பற்றி நீவிர் அறிவது என்ன?

2. What is meant by team work?
குழுப்பணி பற்றி அறிவது என்ன?

3. State the main types of diversity management.
பன்முகத்தன்மை மேலாண்மையின் முக்கிய வகைகளைக் குறிப்பிடுக.

4. Write a note on CPM analysis.
CPM பகுப்பாய்வு பற்றி குறிப்பு எழுதுக.

5. What are the benefits of project assessment?
திட்ட மதிப்பீட்டின் நன்மைகள் யாவை?

6. Define the term 'Quality' in project quality management.
திட்ட தர மேலாண்மையில் 'தரம்' என்ற சொல்லை வரையறுக்க.

7. What are the advantages of computer based information system?

கணினி அடிப்படையிலான தகவல் அமைப்பின் நன்மைகள் யாவை?

8. Mention any two benefits of performance evaluation.

செயல்திறன் மதிப்பாய்வின் ஏதேனும் இரண்டு நன்மைகளைக் குறிப்பிடுக.

9. State the purpose of project execution.

திட்டத்தை நிறைவேற்றுவதன் நோக்கத்தைக் குறிப்பிடுக.

10. What is meant by project follow up?

திட்ட பின்தொடர்தல் பற்றி அறிவது என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) Briefly explain the principles of project management.

திட்ட மேலாண்மையின் கொள்கைகளை சுருக்கமாக விளக்குக.

Or

(b) State the importance of project planning.

செய்திட்ட வரைவு திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கூறுக.

12. (a) List out the factors affecting the project organization structure.

திட்ட அமைப்பு கட்டமைப்பை பாதிக்கும் காரணிகளை பட்டியலிடுக.

Or

(b) Write about the basic rules to follow in developing project networks.

திட்ட வலையமைப்பினை உருவாக்கும்போது பின்பற்ற வேண்டிய அடிப்படை விதிகளைப் பற்றி எழுதுக.

13. (a) Explain the techniques of quantitative risk analysis.

அளவுசார் இடர் பகுப்பாய்வின் நுட்பங்களை விளக்குக.

Or

(b) Bring out the steps involved in value engineering.

மதிப்பு பொறியியலில் உள்ள படிகளை வெளிக் கொணர்க.

14. (a) Describe briefly the functions of PMIS.

PMIS–ன் பணிகளை சுருக்கமாக விவரிக்க.

Or

(b) Explain the various components of contract management.

ஒப்பந்த மேலாண்மையின் பல்வேறு கூறுகளை விளக்குக.

15. (a) State the benefits of project control.

திட்டக் கட்டுப்பாட்டின் நன்மைகளைக் கூறுக.

Or

(b) Explain the different types of project termination.

பல்வேறு வகையான திட்ட முடிவுறுதல்களை விளக்குக.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. Explain the various stages of project management.

திட்ட மேலாண்மையின் பல்வேறு நிலைகளை விளக்குக.

17. Describe the advantages and disadvantages of PERT analysis.

PERT பகுப்பாய்வின் நன்மைகள் மற்றும் தீமைகளை விவரிக்க.

18. Discuss the role of risk management in overall project management.

ஒட்டுமொத்த திட்ட மேலாண்மையில் இடர் மேலாண்மையின் பங்கை விவாதிக்க.

19. Examine the different techniques of performance measurement.

செயல்திறன் அளவீட்டின் பல்வேறு நுட்பங்களை ஆராய்க.

20. Trace out the benefits of using project management software.

திட்ட மேலாண்மை மென்பொருளைப் பயன்படுத்துவதன் நன்மைகளைக் கண்டறிக.

———————

D–1289

Sub. Code
10261/12561

DISTANCE EDUCATION

B.Com./B.Com. (Lateral Entry) DEGREE EXAMINATION,
MAY 2023.

Sixth Semester

MARKETING RESEARCH

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer ALL the questions

1. What is Market Research?
சந்தை ஆராய்ச்சி என்றால் என்ன?

2. What is secondary data?
இரண்டாம் நிலை தரவு என்றால் என்ன?

3. What is descriptive research?
விளக்க ஆராய்ச்சி என்றால் என்ன?

4. Define: Questionnaire.
வரையறு : கேள்வித்தாள்.

5. What is sample size?
மாதிரி அளவு என்றால் என்ன?

6. What are the types of scale?
அளவின் வகைகள் யாவை?

7. What is bivariate analysis?

இருவகை பகுப்பாய்வு என்றால் என்ன?

8. What is data entry?

தரவு உள்ளீடு என்றால் என்ன?

9. Write a short note on Product research.

தயாரிப்பு ஆராய்ச்சி பற்றி சிறு குறிப்பு வரைக.

10. What is consumer market research?

நுகர்வோர் சந்தை ஆராய்ச்சி என்றால் என்ன?

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL the questions choosing either (a) or (b).

11. (a) What are the characteristics of research.

ஆராய்ச்சியின் அம்சங்கள் யாவை?

Or

(b) What are the advantages of research design?

ஆராய்ச்சி வடிவமைப்பின் நன்மைகள் யாவை?

12. (a) Explain the meaning of research plan.

ஆராய்ச்சித் திட்டத்தின் அர்த்தத்தை விளக்குக.

Or

(b) Briefly explain Likert Scale.

லைக்கர்ட் அளவுகோலை சுருக்கமாக விளக்குக.

13. (a) What is closed ended question? state its merits.

மூடியகேள்வி என்றால் என்ன? அதன் நன்மைகளை தருக.

Or

(b) What is the purpose of questionnaire?

கேள்வித்தாளின் நோக்கங்கள் யாவை?

14. (a) Write a short note on Conjoint analysis.

ஒருங்கிணைந்த பகுப்பாய்வு பற்றி சிறு குறிப்பு வரைக.

Or

(b) What is Analysis of data ? Explain its features.

தரவு பகுப்பாய்வு என்றால் என்ன? அதன் அம்சங்களை விளக்குக.

15. (a) What are the characteristics of a good research report?

ஒரு நல்ல ஆய்வு அறிக்கையின் பண்புகள் யாவை?

Or

(b) What are the characteristics of a good research?

ஒரு நல்ல ஆராய்ச்சியின் பண்புகள் யாவை?

PART C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Discuss the different components of research design.

ஆராய்ச்சி வடிவமைப்பின் வெவ்வேறு கூறுகளை விவாதிக்க.

17. Explain different methods of sampling.

மாதிரி கூறெடுத்தலின் வெவ்வேறு முறைகளை விளக்குக.

18. Distinguish between schedule and questionnaire.
அட்டவணை மற்றும் கேள்வித்தாளை வேறுபடுத்துங்க.

19. Explain the nature of data preparation.
தரவு தயாரிப்பின் தன்மையை விளக்குக.

20. Enumerate the steps involved in writing a research report.
ஆய்வு அறிக்கையை எழுதுவதில் உள்ள படிகளைக் கணக்கிடுக.

———————

D–1290

Sub. Code
10262/12562

DISTANCE EDUCATION

B.Com./B.Com. (Lateral Entry) DEGREE EXAMINATION,
MAY 2023.

Sixth Semester

CORPORATE ACCOUNTING

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL the questions.

1. What is meant by Under Subscription?
குறை ஒப்பம் பற்றி அறிவது என்ன?

2. What is a Convertible Debenture?
மாற்றக்கூடிய கடனீட்டுப்பத்திரம் என்றால் என்ன?

3. What are divisible profits?
பகிர்ந்தளிக்ககூடிய இலாபங்கள் யாவை?

4. What do you mean by Yield Method?
வருமான முறை பற்றி நீவிர் அறிவது என்ன?

5. What is Absorption?
ஈர்ப்பு என்றால் என்ன?

6. Who is Contributory?
பங்களிப்பாளர் என்பவர் யார்?

7. Who are Preferential Creditors?
முன்னுரிமை கடனீந்தோர்கள் என்பவர் யார்?

8. What is Subsidiary Company?
துணை நிறுமம் என்றால் என்ன?

9. What is Non-Performing Assets?
செயல்பாடற்ற சொத்துக்கள் என்றால் என்ன?

10. What is Human Resource Accounting?
மனித வள கணக்கியல் என்றால் என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) A shareholder holding 500 equity shares of Rs. 10 each of a company issued at 10% discount. He paid Rs. 2 on application, Rs. 3 on allotment but could not pay first call of Rs. 3 per share and these shares were forfeited for non-payment and subsequently re-issued for Rs. 7 per share. Give necessary journal entries.

ஒரு பங்குதாரர் 10% தள்ளுபடியில் வெளியிட்ட ஒரு நிறுமத்தின் 500 பொதுநிலை பங்குகள் ஒன்று ரூ. 10 வீதம் கொண்ட பங்குகளை வைத்திருந்தார். அவர் விண்ணப்பத்தின் போது ரூ. 2ம், ஒதுக்கீட்டின் போது ரூ.3ம் செலுத்தியிருந்தார். ஆனால் முதல் அழைப்பான ரூ.3–ஐ அவர் செலுத்தவில்லை. எனவே அப்பங்குகளானது ஒறுப்பிழைப்பு செய்யப்பட்டு தொடர்ச்சியாக பங்கு ஒன்றுக்கு ரூ. 7 வீதம் மறு வெளியீடு செய்யப்பட்டது. தேவையான குறிப்பேட்டுப் பதிவைத் தருக.

Or

(b) The following are the details taken from the records of B Ltd on June 30, 2018.

Particulars	Rs.
Share capital :	
Equity Share Capital (Fully Paid up)	6,00,000
Preference Shares (Fully Paid up)	3,00,000
General Reserve	2,00,000
Profit and Loss Account (Cr)	1,25,000
Share Premium Account	50,000

The company decided to redeem the preference shares at a premium of 10% out of its general reserve and profit and loss account. Give journal entries relating to redemption of preference shares.

பின்வரும் தகவல்கள் B நிறுமத்தின் 30.06.2018ம் நாளுக்குரியது.

விவரங்கள்	ரூ.
பங்கு முதல் :	
பொதுநிலை பங்குகள் (முழுவதும் செலுத்தப்பட்டவை)	6,00,000
முன்னுரிமை பங்குகள் (முழுவதும் செலுத்தப்பட்டவை)	3,00,000
பொதுகாப்பு	2,00,000
இலாப நட்டக் கணக்கு (வ)	1,25,000
பங்கு முனைம கணக்கு	50,000

அக்கம்பெனியானது முன்னுரிமை பங்குகளை பொதுகாப்பு மற்றும் இலாப நட்டக் கணக்கின் இருப்பில் 10% முனைமத்தில் மீட்க முடிவு செய்தது. முன்னுரிமை பங்குகளை மீட்பது தொடர்பான குறிப்பேட்டு பதிவுகளைத் தருக.

12. (a) Describe the various factors affecting goodwill.

நற்பெயரை பாதிக்கும் பல்வேறு காரணிகளை விளக்குக.

Or

(b) The following particulars relate to a Ltd. Company which has gone into voluntary liquidation. The liquidator is entitled to get 2% on the amount distributed to unsecured creditors other than preferential. You are required to prepare the liquidators final accounts.

Particulars	Rs.
Preferential Creditors	10,000
Unsecured Creditors	32,000
Debentures	10,000
The Assets realized are:	
Land and Buildings	20,000
Plant and Machinery	18,650
Furniture and Fittings	1,000
Liquidation Expenses	1,000

பின்வரும் தகவல்களானது தானாக கலைக்கப்பட்ட ஒரு நிறுமத்திற்குரியது. முன்னுரிமை கடனீந்தோருக்கு அளிக்கப்பட்ட தொகையை தவிர பிணையமில்லா கடனீந்தோருக்கு வழங்கப்பட்ட தொகையின் 2% ஊதியம் பெற கலைப்பாளருக்கு உரிமை உண்டு. இதிலிருந்து கலைப்பாளரின் இறுதி கணக்கை தயார் செய்க.

விவரங்கள்	ரூ.
முன்னுரிமை கடனீந்தோர்	10,000
பிணையமில்லா கடனீந்தோர்	32,000
கடனீட்டு பத்திரம்	10,000
விற்கப்பட்ட சொத்துக்கள் பின்வருமாறு :	
நிலம் மற்றும் கட்டிடம்	20,000
பொறி மற்றும் இயந்திரம்	18,650
அறைகலன் மற்றும் பொருத்துகள்	1,000
கலைப்புச் செலவுகள்	1,000

13. (a) What are the procedures to be followed for reducing share capital?

பங்கு முதலை குறைப்பதற்காக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவை?

Or

(b) From the following balance sheets of holding company and subsidiary company, prepare a consolidated Balance sheet of Holding company and its Subsidiary company.

Liabilities	H	S	Assets	H	S
Share capital (Rs. 10 each)	20,00,000	10,00,000	Investment of Rs. 10 each in subsidiary company	10,00,000	–
Liabilities	15,00,000	2,00,000	Sundry assets	25,00,000	12,00,000
	35,00,000	12,00,000		35,00,000	12,00,000

கீழே கொடுக்கப்பட்டுள்ள பிடிப்பு மற்றும் அதன் துணை நிறுமத்தின் இருப்புநிலைக் குறிப்பிலிருந்து பிடிப்பு மற்றும் அதன் துணை நிறுமத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட இருப்புநிலைக் குறிப்பினைத் தயாரிக்கவும்.

பொறுப்புகள்	H	S	சொத்துக்கள்	H	S
பங்கு முதல் ரூ. 10 வீதம்	20,00,000	10,00,000	துணை நிறுமத்தில் முதலீடுகள் ரூ. 10 வீதம்	10,00,000	–
பொறுப்புகள்	15,00,000	2,00,000	பற்பல சொத்துக்கள்	25,00,000	12,00,000
	35,00,000	12,00,000		35,00,000	12,00,000

14. (a) From the following details relating to Banking company, find out the profit balance carried over to the balance sheet.

	Rs.
Interest earned	5,25,000
Other incomes	2,20,440
Interest expended	1,25,000
Operating expenses	1,83,686
Profit brought forward from the previous year	1,00,640

Transfer to the statutory reserve at 25%.

கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வங்கி நிறுவனத்திற்குரியது. இலாபத்தை கண்டுபிடித்து இருப்புநிலைக் குறிப்பேட்டில் காட்டவும்.

	ரூ.
பெறப்பட்ட வட்டி	5,25,000
இதர வருமானம்	2,20,440
வட்டி செலவழித்தது	1,25,000
செயல்பாட்டுச் செலவினங்கள்	1,83,686
கடந்த ஆண்டு இலாபத்தை கீழே இறக்கப்பட்டது	1,00,640

கட்டாயக் காப்பிற்கு மாற்றப்பட்டது – 25%.

Or

(b) From the following prepare the fire revenue account for 2015 – 2016 :

	Rs.
Claims Paid	35,650
Premium received	80,000
Reinsurance premiums	8,000

	Rs.
Commission	12,000
Expenses of Management	18,000
Provision against unexpired risk (01.04.2015)	32,000
Claims unpaid on 01.04.2015	2,600
Claims unpaid on 31.03.2016	3,200

கீழ்க்கண்டவற்றிலிருந்து தீ வருவாய்க் கணக்கை 2015–2016க்கு தயாரிக்கவும்.

	ரூ.
செலுத்திய கோரிக்கைகள்	35,650
பெற்ற முனைமம்	80,000
மறுகாப்பீட்டு முனைமம்	8,000
கழிவு	12,000
மேலாண்மைச் செலவுகள்	18,000
கெடு முடியாத இடர்கான ஒதுக்கு (01.04.2015)	32,000
01.04.2015 அன்று செலுத்தப்படா கோரிக்கைகள்	2,600
31.03.2016 அன்று செலுத்தப்படா கோரிக்கைகள்	3,200

15. (a) What is IFRS? State its advantages.

IFRS என்றால் என்ன? அதனுடைய நன்மைகளை கூறுக.

Or

(b) What are the principles of responsibility accounting?

பொறுப்பு கணக்கியலின் கோட்பாடுகள் யாவை?

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. The following is the Trial Balance of Adharash & Co., Ltd as on 31.03.2018 with the authorised capital of 72,000 shares @ Rs. 10 each.

Particulars	Debit (Rs.)	Credit (Rs.)
Cash in Hand	900	
Cash at Bank	3,55,980	
Profit and Loss a/c		17,400
Creditors		60,000
Debentures		3,60,000
Share Capital (Called up)		5,52,000
Bills Payable		45,600
Sales		4,98,000
Reserve for Bad Debts		4,200
General Reserve		30,000
Calls in arrears	9,000	
Wages	92,760	
Land and Buildings	3,60,000	
Plant and Machinery	4,32,000	
General Expenses	20,280	
Salaries	17,400	
Interim dividend paid	9,000	
Furniture	40,000	
Purchases	2,29,880	
	15,67,200	15,67,200

Adjustments :

(a) Outstanding Wages Rs.6,000; Salaries Rs.3,000.

(b) General expenses include prepaid insurance @ Rs.300.

(c) Provide depreciation on Land and Buildings, Plant and Machinery and Furniture 5%, 10% and 20% respectively.

(d) Stock on 31.03.2018 amounted to Rs. 1,40,000.

(e) Outstanding interest on debenture Rs. 18,000

(f) Final dividend paid Rs. 21,000

Prepare final accounts.

பின்வரும் இருப்பாய்வானது 31.03.2018 அன்றைய அட்ராஸ் நிறுமத்திற்குரியது. அதனுடைய அங்கீகரிக்கப்பட்ட முதல் 72,000 பங்குகள் ஒன்று ரூ. 10 வீதம் ஆகும்.

விபரங்கள்	பற்று (ரூ.)	வரவு (ரூ.)
கையிருப்பு ரொக்கம்	900	
வங்கியிருப்பு ரொக்கம்	3,55,980	
இலாப நட்ட க/கு		17,400
கடனீந்தோர்கள்		60,000
கடனீட்டு பத்திரங்கள்		3,60,000
பங்கு முதல் (அழைக்கப்பட்டவை)		5,52,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு		45,600
விற்பனை		4,98,000
வாராக்கடன் காப்பு		4,200
பொதுக் காப்பு		30,000
அழைப்பு நிலுவை	9,000	
கூலி	92,760	
நிலம் மற்றும் கட்டிடங்கள்	3,60,000	
பொறி மற்றும் இயந்திரம்	4,32,000	

விபரங்கள்	பற்று (ரூ.)	வரவு (ரூ.)
பொது செலவினங்கள்	20,280	
சம்பளங்கள்	17,400	
இடைக்கால பங்காதாயம் செலுத்தியது	9,000	
அறைகலன்	40,000	
கொள்முதல்	2,29,880	
	15,67,200	15,67,200

சரிக்கட்டுதல்கள் :

(அ) கொடுபட வேண்டிய கூலி ரூ.6,000; சம்பளங்கள் ரூ. 3,000.

(ஆ) பொது செலவினத்தில் ரூ. 300 பெறுமான தொகை காப்பீட்டிற்காக முன்கூட்டி செலுத்தப்பட்டவை சேர்ந்துள்ளது.

(இ) நிலம் மற்றும் கட்டிடம், பொறி மற்றும் இயந்திரம் மற்றும் அறைகலன் மீது 5%, 10% மற்றும் 20% என முறையாக தேய்மானம் ஒதுக்குக.

(ஈ) 31.03.2018 அன்றைய சரக்கிருப்பு ரூ. 1,40,000.

(உ) கடனீட்டுப் பத்திரம் மீதான கொடுக்கபட வேண்டிய வட்டி ரூ. 18,000

(ஊ) இறுதி பங்காதாயம் செலுத்தியது ரூ. 21,000

இறுதி கணக்கை தயார் செய்க.

17. The following is the balance sheet of X Ltd, as on 31.03.2018.

Liabilities	Rs.	Assets	Rs.
2,00,000 shares of Rs. 10 each	20,00,000	L & B	10,00,000
12% Debentures	10,00,000	P & M	15,00,000
Sundry creditors	3,00,000	Stock	6,00,000
General Reserve	2,50,000	Debtors	2,50,000

Liabilities	Rs.	Assets	Rs.
Dividend Equalisation Fund	2,00,000	WIP	3,00,000
P and L account	51,000	Furniture	25,000
		Cash at Bank	1,26,000
	38,01,000		38,01,000

The company was absorbed by A Ltd., on the above date. The consideration for the absorption is the discharge of the debentures at a premium of 5% taking over the liability in respect of the sundry creditors and a payment of Rs. 7 each in cash and one share of Rs.5 in A Ltd at a market value of Rs. 8 per share in exchange for one share in X Ltd. The cost of liquidation of Rs. 15,000 is to be met by the purchasing company. Prepare ledger accounts of X Ltd and Pass journal entries in the book of A Ltd.

X லிமிடெட்டின் 31.03.2018 அன்றைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

பொறுப்புகள்	ரூ.	சொத்துக்கள்	ரூ.
2,00,000 பங்குகள் ஒன்று 10 வீதம்	20,00,000	நிலம் மற்றும் கட்டிடம்	10,00,000
12% கடன் பத்திரங்கள்	10,00,000	பொறி மற்றும் இயந்திரம்	15,00,000
பற்பல கடனீந்தோர்கள்	3,00,000	சரக்கிருப்பு	6,00,000
பொது காப்பு	2,50,000	கடனாளிகள்	2,50,000
பங்காதாய சமநிலை காப்பு	2,00,000	முன்னேறும் வேலை	3,00,000
இலாப நட்ட கணக்கு	51,000	அறைகலன்கள்	25,000
		வங்கியிருப்பு ரொக்கம்	1,26,000
	38,01,000		38,01,000

இக்கம்பெனியை மேற்காணும் தேதியில் A நிறுமம் ஈர்ப்பு செய்தது. மறுபயனை கீழ்க்கண்டவாறு பெற்றுக் கொள்வதாக ஏற்கப்பட்டது. கடனீட்டுப்பத்திரங்களை 5% முனைமத்தில் விடுவிப்பது, கடனீந்தோர்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளுதல் X, லிமிடெட்டின் ஒவ்வொரு பங்கிற்கும் A லிமிடெட்டின் ரூ. 5 மதிப்புடைய (சந்தை மதிப்பு ரூ. 8) பங்கு மற்றும் ரொக்கம் ரூ. 7 ஐ வழங்குதல். நிறுவன கலைப்பு செலவு ரூ. 15,000 த்தை கொள்முதல் கம்பெனியே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

X லிமிடெட்டின் ஏடுகளை முடித்து வைத்து, A லிமிடெட்டின் ஏடுகளில் முதற்குறிப்பேட்டு பதிவுகளை தருக.

18. The Balance sheet of Zee Ltd. as on 31.12.2007 was as follows :

Liabilities	Rs.		Assets	Rs.
Share Capital :			Good will	10,000
12,000 shares of Rs. 10 each	1,20,000		Machinery	71,350
Less : Calls in arrears			Preliminary Expenses	1,500
(Rs.3 per share)	9,000	1,11,000	Stock	25,275
Creditors		15,425	Bank	1,500
Provision for taxes		4,000	Profit & Loss a/c	20,800
		1,30,425		1,30,425

Machinery was found overvalued by Rs. 10,000. It was decided to write down the value of this asset to its true value and to eliminate other fictitious assets by the adoption of the following course.

(a) Forfeit the share in which calls are in arrears.

(b) Reduce the paidup capital by Rs.3 per share.

(c) Re-issue the forfeited shares at Rs.5 per share.

(d) Utilise the provision for taxation if necessary.

Journalise and prepare the Balance sheet after carrying out the scheme.

Zee நிறுமத்தின் 31.12.2007ம் நாளைய இருப்புநிலை குறிப்பு பின்வருமாறு :

பொறுப்புகள்		ரூ.	சொத்துக்கள்	ரூ.
பங்கு முதல் :			நற்பெயர்	10,000
12,000 பங்குகள் ஒன்று ரூ. 10 வீதம்	1,20,000		இயந்திரம்	71,350
கழிக்க : அழைப்பு நிலுவை			தொடக்க செலவுகள்	1,500
(பங்கு ஒன்றுக்கு ரூ. 3 வீதம்)	9,000	1,11,000	சரக்கிருப்பு	25,275
கடனீந்தோர்கள்		15,425	வங்கி	1,500
வருமான வரி ஒதுக்கு		4,000	இலாப நட்ட கணக்கு	20,800
		1,30,425		1,30,425

இயந்திரமானது ரூ. 10,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது தெரிய வந்தது. இந்த சொத்தின் மதிப்பை அதனுடைய உண்மையான மதிப்பிற்கு குறைக்க முடிவு செய்யப்பட்டது. மேலும் பின்வரும் செயல்களுக்கு உட்பட்டு இதர கண்ணிற்கு புலனாகாத சொத்துக்களை போக்கெழுத முடிவு செய்யப்பட்டது.

(அ) அழைப்பு நிலுவையில் உள்ள பங்குகளை ஒறுப்பிழைப்பு செய்தல்

(ஆ) செலுத்திய முதலில் பங்கு ஒன்றுக்கு ரூ. 3 இன்னும் குறைத்தல்

(இ) ஒறுப்பிழைப்பு செய்த பங்குகளை பங்கு ஒன்றுக்கு ரூ. 5 வீதம் மறுவெளியீடு செய்தல்

(ஈ) தேவைப்பட்டால் வருமானவரி, ஒதுக்கை பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய திட்டத்தை நடைமுறை படுத்திய பின்னர் முதற்குறிப்பேட்டு பதிவுகளையும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

19. On 31st March 2016 the balance sheets of H Ltd and its subsidiary S Ltd stood as follows :

Liabilities	H Ltd	S Ltd	Assets	H Ltd	S Ltd
	Rs.	Rs.		Rs.	Rs.
Share Capital Rs. 10 each	8,00,000	2,00,000	Fixed Assets	5,50,000	1,00,000
General Reserve	1,50,000	70,000	75% shares in S Ltd at cost	2,80,000	–
Profit & Loss account	90,000	55,000	Stock	80,000	90,000
Creditors	80,000	60,000	Debtors	25,000	87,000
Bills Payable	40,000	20,000	Other Current Assets	2,25,000	1,28,000
	11,60,000	4,05,000		11,60,000	4,05,000

Draw a consolidated Balance Sheet as at 31st March 2016 after taking into consideration the following information :

(a) H Ltd acquired the share son 31st July 2015.

(b) S Ltd earned a profit of Rs. 45,000 for the year ended 31st March 2016.

H லிமிடெட் மற்றும் அதன் துணைக் கம்பெனியாக S லிமிடெட்டின் 31.03.2016–ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

பொறுப்புகள்	H லிமிடெட்	S லிமிடெட்	சொத்துக்கள்	H லிமிடெட்	S லிமிடெட்
	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
பங்கு முதல் ஒன்று ரூ. 10 வீதம்	8,00,000	2,00,000	நிலை சொத்துக்கள்	5,50,000	1,00,000
பொதுக்காப்பு	1,50,000	70,000	S லிமிடெட்டில் வாங்கிய 75% பங்கு (அடக்கவிலையில்)	2,80,000	–

பொறுப்புகள்	H லிமிடெட்	S லிமிடெட்	சொத்துக்கள்	H லிமிடெட்	S லிமிடெட்
	ரூ.	ரூ.		ரூ.	ரூ.
இலாப நட்ட கணக்கு	90,000	55,000	சரக்கிருப்பு	80,000	90,000
கடனீந்தோர்கள்	80,000	60,000	கடனாளிகள்	25,000	87,000
செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு	40,000	20,000	இதர நடப்பு சொத்துக்கள்	2,25,000	1,28,000
	11,60,000	4,05,000		11,60,000	4,05,000

பின்வரும் தகவல்களை கவனத்தில் கொண்டு 31.03.2016 அன்று ஒரு ஒருங்கிணைந்த இருப்புநிலைக்குறிப்பை தயார் செய்க.

(அ) 31.07.2015 அன்று H லிமிடெட் பங்குகளை S லிமிடெட்டிடமிருந்து வாங்கியது

(ஆ) S லிமிடெட் ரூ. 45,000 பொறுமான இலாபத்தை 31.03.2016 அன்று ஈட்டியது.

20. From the following information of ABC Bank, prepare profit and loss account for the year ended 31st March, 2013 (in 000s)

	Rs.		Rs.
Interest on Loans	2,590	Interest of Fixed Deposits	3,170
Commission	82	Payment to Employees	540
Discount on Bills	1,060	Interest on Cash Credit	2,230
Rent and Taxes	180	Interest on Overdrafts	1,540
Directors Fees	30	Auditors Fees	12
Interest on savings bank deposits	680	Postage and Telegrams	14
Printing and Stationery	29	Sundry Charges	17

Additional information :

(a) Provide for Contingencies Rs. 2,00,000

(b) Transfer Rs. 15,57,000 to reserves and

(c) Transfer Rs. 2,00,000 to central government.

ABC வங்கியின் பின்வரும் தகவல்களை கொண்டு 31.03.2013ம் நாளோடு முடியக்கூடிய இலாப நட்ட கணக்கை தயார் செய்க. (000' ஆயிரத்தில்)

	ரூ.		ரூ.
கடன் மீது பெறப்பட்ட வட்டி	2,590	நிலை வைப்பு மீதான வட்டி	3,170
தரகு	82	தொழிலாளிகளுக்கு செலுத்தியது	540
உண்டியல் மீதான தள்ளுபடி	1,060	ரொக்ககடன் மீதான வட்டி	2,230
வாடகை மற்றும் வரி	180	வங்கி மேல்வரைபற்று மீதான வட்டி	1,540
இயக்குநர் கட்டணம்	30	தணிக்கையாளர்கள் கட்டணம்	12
சேமிப்பு வங்கி வைப்பு மீதான வட்டி	680	தபால் மற்றும் தந்தி	14
அச்சு மற்றும் எழுதுபொருள்	29	பற்பல செலவினங்கள்	17

கூடுதல் விவரங்கள் :

(அ) எதிர்பாராத ஒதுக்கு ரூ. 2,00,000

(ஆ) ரூ. 15,57,000 பெறுமான தொகை காப்பிற்கு மாற்ற வேண்டும்.

(இ) ரூ. 2,00,000 பெறுமான தொகை மத்திய அரசின் நிதிக்கு மாற்ற வேண்டும்.

———————

D–1291

Sub. Code
10263/12563/ 12363/12863

DISTANCE EDUCATION

COMMON FOR B.Com./B.Com. (L.E.)/B.Com.(CA)/B.Com.(CA)(L.E) DEGREE EXAMINATION, MAY 2023.

Sixth Semester

ENTREPRENEURSHIP DEVELOPMENT

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL questions.

1. How many factors are there to motivate an entrepreneur?

   தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தக்கூடிய காரணிகள் எத்தனை இருக்கின்றன?

2. State any two functions of DIC.

   மாவட்ட தொழில்மையத்தின் பணிகள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

3. When was KVIC established?

   எப்பொழுது KVIC நிறுவப்பட்டது?

4. What is project implementation?

   திட்டத்தை செயல்படுத்துதல் என்றால் என்ன?

5. Define Layout planning.

   தளவமைப்பு திட்டமிடல் வரையறுக்கவும்.

6. What is load distance analysis?

சுமை தூர பகுப்பாய்வு என்றால் என்ன?

7. What are business risks?

வணிக அபாயங்கள் என்பவை யாவை?

8. State any two characteristics of a good business plan.

ஒரு சிறந்த வணிக திட்டத்தின் பண்புகளில் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

9. Define succession planning.

வாரிசு திட்டமிடல் வரையறுக்கவும்.

10. Write a short note on rehabilitation of sick units.

நலிவடைந்த அலகுகளின் புனர்வாழ்வு பற்றி சிறு குறிப்பு வரைக.

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) State the concept of Entrepreneurship.

தொழில் முனைவின் கருத்தினைக் கூறுக.

Or

(b) What are the functions of women entrepreneurs?

பெண் தொழில் முனைவோரின் பணிகள் யாவை?

12. (a) How to develop rural entrepreneurship?

கிராமப்புற தொழில் முனைவை எவ்வாறு வளர்ச்சிபெற செய்வது?

Or

(b) Define positioning.

நிலைப்படுத்துதல் வரையறு.

13. (a) What is the aim of market analysis?

சந்தை பகுப்பாய்வின் நோக்கம் யாது?

Or

(b) Write a short note on marketing feasibility.

சந்தை சாத்தியகூறு பற்றி சிறு குறிப்பு வரைக.

14. (a) State the problems faced by Small Scale Industries in India.

இந்தியாவில் சிறு தொழில்கள் சந்திக்கும் பிரச்சினைகளை கூறுக.

Or

(b) What are the types of marketing research?

சந்தைப்படுத்துதல் ஆராய்ச்சியின் வகைகள் யாவை?

15. (a) State the demerits of a family business.

குடும்ப வணிகத்தின் தீமைகளைக் கூறுக.

Or

(b) What is Industrial sickness?

தொழில் நலிவு என்றால் என்ன?

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. Describe the functions of entrepreneurs.

தொழில்முனைவோரின் பணிகளை விவரி.

17. Examine the advantages of a good plant layout.

ஒரு நல்ல இட தளவமைப்பின் நன்மைகளை ஆய்க.

18. Explain the types of risks.

இடரின் வகைகளை விளக்குக.

19. What are the various financial institutions providing working capital to small scale industries?

சிறு தொழில்களின் நடப்பு மூலதனம் வழங்கும் சில அமைப்புகளை கூறுக.

20. Explain the different types of franchising.

உரிமம் ஒப்படைவின் பல்வேறு வகைகளை விளக்குக.

———————

D–1292

Sub. Code
10264 / 12564

DISTANCE EDUCATION

B.Com./B.Com. (Lateral Entry) DEGREE EXAMINATION, MAY 2023.

Sixth Semester

MANAGEMENT INFORMATION SYSTEM

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL questions

1. What is meant by System analysis?
முறைமை பகுப்பாய்வு என்பதன் பொருள் யாது?

2. What is the risk with regard to information system?
தகவல் அமைப்பு தொடர்பான இடர்பாடு யாது?

3. Give the meaning for system design.
முறைமை வடிவமைப்பின் பொருள் தருக.

4. What is data collection approach?
தரவு சேகரிப்பு அணுகுமுறை என்றால் என்ன?

5. What is business process re – engineering?
வணிக செயல்முறை மறுபொறியியல் என்றால் என்ன?

6. Who has classified management levels?
மேலாண்மை நிலைகளை வகைப்படுத்தியது யார்?

7. What is E – Enterprise system?

மின் நிறுவன அமைப்பு என்றால் என்ன?

8. What is E – Commerce?

மின் வணிகம் என்றால் என்ன?

9. Define file server.

கோப்பு சேவையகம் வரையறுக்கவும்.

10. What do you mean by a database system?

தரவு அடிப்படை அமைப்பு பற்றி நீவிர் அறிவது யாது?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL questions, choosing either (a) or (b)

11. (a) What is information strategy?

தகவல் உத்தி என்றால் என்ன?

Or

(b) What is the use of tender documents?

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் பயன் யாது?

12. (a) Define Semi – structured decisions.

பாதி கட்டமைக்கப்பட்ட முடிவுகள் வரையறுக்கவும்.

Or

(b) State the demerits of the organization chart approach.

அமைப்பு விளக்கப்பட்ட அணுகுமுறையின் தீமைகளைக் கூறுக.

13. (a) Mention the evolution of Enterprise Resource Planning.

நிறுவன வள திட்டமிடுதலின் பரிணாமத்தை குறிப்பிடுக.

Or

(b) How is organizational economics useful?

எவ்வாறு நிறுவன பொருளாதாரம் பயனுள்ளதாக இருக்கிறது?

14. (a) Indicate the basic features of E – Commerce.

மின் - வணிகத்தின் அடிப்படை இயல்புகளை குறிப்பிடுக.

Or

(b) What is E – banking?

மின் வங்கி என்றால் என்ன?

15. (a) State about Network convergence.

வலையமைப்பு ஒருங்கினைதீவு பற்றி கூறுக.

Or

(b) Write short notes on "Security hazards".

பாதுகாப்பு அபாயங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions

16. Explain the different types of Micro computers.

நுண் கணினியின் பல்வேறு வகைகளை விளக்குக.

17. Examine the development strategy for information system.

தகவல் அமைப்பிற்குண்டான வளர்ச்சி உத்திகளை ஆய்க.

18. Discuss the benefits of Enterprise Resource planning in detail.

நிறுவன வன திட்டமிடுதலின் நன்மைகளை விரிவாக விவாதிக்கவும்.

19. Explain the mechanics of E – Commerce.

மின் - வணிகத்தின் இயக்கவியலை விளக்குக.

20. Describe the five major types of competitive threats.

போட்டி அச்சுறுத்தல்களின் ஐந்து முக்கிய வகைகளை விவரிக்கவும்.

———————

D–4226

Sub. Code
10211/12311/ 0211

DISTANCE EDUCATION

COMMON FOR B.Com./B.Com. (CA) DEGREE EXAMINATION, MAY 2024.

First Semester

PRINCIPLES OF MANAGEMENT

(CBCS 2018-19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL the questions.

1. Define the term management.
   மேலாண்மை எனும் பதத்தை வரையறுக்க.

2. What do you mean by Planning?
   திட்டமிடுதல் பற்றி நீவீர் அறிவது என்ன?

3. Give the meaning of Staffing.
   பணியமர்த்துதலின் பொருள் தருக.

4. What do you mean by directing?
   இயக்குவித்தல் பற்றி நீவீர் அறிவது என்ன?

5. What is Organisational Behaviour?
   நிறுவன நடத்தை என்றால் என்ன?

6. Define the term Personality.
   ஆளுமை திறன் எனும் பதத்தை வரையறுக்க.

7. What do you mean by learning?

கற்றல் பற்றி நீவீர் அறிவது என்ன?

8. Define the term Group.

குழு எனும் பதத்தை வரையறுக்க.

9. What do you mean by negotiation?

கூடிக் கலந்து பேசுதல் பற்றி நீவீர் அறிவது என்ன?

10. What is Organizational Conflict?

நிறுவன மோதல் என்றால் என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL the questions, choosing either (a) or (b).

11. (a) What are the importance of Management?

மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக.

Or

(b) Briefly explain the various types of managerial decisions.

மேலாண்மை முடிவெடுத்தலின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விளக்குக.

12. (a) What are the advantages of functional organisation?

செயல்பாட்டு அமைப்பின் நன்மைகள் யாவை?

Or

(b) State the functions of a leader.

ஒரு தலைமை ஏற்பவரின் பணிகளை கூறுக.

13. (a) Bring out the importance of organizational behavior.

நிறுவன நடத்தையின் முக்கியத்துவத்தை தருக.

Or

(b) How personality influences organizational behavior? Explain.

நிறுவன நடத்தையை ஆளுமைத்திறன் எவ்வாறு தூண்டுகிறது? விளக்குக.

14. (a) State the various determinants of learning.

கற்றலை தீர்மானிக்கக் கூடியவைகளை குறிப்பிடுக.

Or

(b) Explain the different types of groups.

ஒரு குழுவின் வெவ்வேறு வகைகளை விளக்குக.

15. (a) Describe the features of organizational culture.

நிறுவன கலாச்சாரத்தின் அம்சங்களை விவரிக்க.

Or

(b) Bring out the seven steps of intact team building.

குழு கட்டமைப்பின் ஏழு படிகளை தருக.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. Explain the various stages in the history of management thought.

மேலாண்மைச் சிந்தனை வரலாற்றின் பல்வேறு படிநிலைகளை விளக்குக.

17. Explain the basic requirements of an effective control system.

ஒரு பயனுள்ள கட்டுப்பாட்டு முறைமையின் அடிப்படைத் தேவைகளை விளக்குக.

18. Identify the role and limitations of organizational behavior.

நிறுவன நடத்தையின் பங்கு மற்றும் குறைபாடுகளை அடையாளம் காண்க.

19. Discuss the different theories of Motivation.

ஊக்குவித்தலின் வெவ்வேறு கோட்பாடுகளை விவாதிக்க.

20. Discuss the various factors affecting organizational change.

நிறுவன மாற்றத்தை பாதிக்கும் பல்வேறு காரணிகளை விவாதிக்க.

———————

D–4227

Sub. Code
10212/12312/ 0212

DISTANCE EDUCATION

COMMON FOR B.Com./B.Com. (CA) DEGREE EXAMINATION, MAY 2024

First Semester

BUSINESS COMMUNICATION

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL questions.

1. Define Communication.
தகவல்தொடர்பை வரையறுக்க.

2. What is listening skills?
கேட்கும் திறன் என்றால் என்ன?

3. What is meant by internal communication?
உள் தகவல்தொடர்பு என்பதன் பொருள் யாது?

4. What do you mean by communication network?
தகவல்தொடர்பு வலைப்பின்னல் பற்றி நீவிர் அறிவது என்ன?

5. What is memo?
குறிப்பாணை என்றால் என்ன?

6. What do you understand by report writing?
அறிக்கை எழுதுதல் பற்றி நீவிர் அறிவது என்ன?

7. Write the meaning of Etiquette.
ஆசாரம் என்பதன் பொருளை எழுதுக.

8. What is meant by open meeting?
திறந்த கூட்டம் பற்றி அறிவது என்ன?

9. What is meant by employment communication?
வேலைவாய்ப்பு தகவல்தொடர்பு என்பதன் பொருள் யாது?

10. Write a short note on Job interview.
வேலை நேர்காணல் பற்றி ஒரு சிறு குறிப்பு வரைக.

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions choose either (a) or (b).

11. (a) Explain the process of communication.
தகவல்தொடர்பின் படிமுறையை விளக்குக.

Or

(b) What are the importance of verbal communication?
வாய்மொழி தகவல்தொடர்பின் முக்கியத்துவங்கள் யாவை?

12. (a) State the channels of internal communication.
உள் தகவல்தொடர்பின் வழங்கல்களைக் குறிப்பிடவும்.

Or

(b) What are the types of communication network?
தகவல்தொடர்பு வலைப்பின்னல்களின் வகைகள் யாவை?

13. (a) What are the importance of Business letters?
வணிக கடிதத்தின் முக்கியத்துவங்கள் யாவை?

Or

(b) State the guidelines for writing a circular.
ஒரு சுற்றறிக்கை எழுதுவதற்கான வழிகாட்டுதல்களைக் குறிப்பிடவும்.

14. (a) Explain the steps in making a presentation.

ஒரு விளக்கக்காட்சியை உருவாக்குவதற்கான படிகளை விளக்குக.

Or

(b) Write a short note on Time management.

நேர மேலாண்மை பற்றி சிறு குறிப்பு வரைக.

15. (a) What are the types of resume?

தற்குறிப்பின் வகைகள் யாவை?

Or

(b) Explain the characteristics of Job interview.

வேலை நேர்காணலின் சிறப்பியல்புகளை விளக்குக.

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. State the measures to overcome the bathers of communication.

தகவல்தொடர்புக்கான தடைகளை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை குறிப்பிடுக.

17. Explain the formal and informal communication network.

முறையான மற்றும் முறைசாரா தகவல்தொடர்பு வலையமைப்பை விளக்குக.

18. What are the features of writing a good report?

ஒரு நல்ல அறிக்கை எழுதுவதன் அம்சங்கள் யாவை?

19. Explain the different types of business meetings.

பல்வேறு வகையான வணிக கூட்டங்களை விளக்குக.

20. Explain the importance and factors involving Job interview.

வேலை நேர்காணல் சம்பந்தப்பட்ட முக்கியத்துவத்தையும், காரணிகளையும் விளக்குக.

———————

D–4228

Sub. Code
10213/0213

DISTANCE EDUCATION

B.Com. DEGREE EXAMINATION, MAY 2024

First Semester

BUSINESS ENVIRONMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)
Answer ALL questions.

1. What is meant by socio cultural environment?
சமூக கலாச்சார சூழல் பற்றி அறிவது என்ன

2. What do you understand by economic policies?
பொருளதாரக் கொள்கைகள் மூலம் நீவீர் என்ன புரிந்து கொள்கிறீர்கள்?

3. What do you mean by socialistic economic system?
சமூக பொருளாதார அமைப்பு நீவீர் அறிவது என்ன?

4. Infer the term mixed economic system.
கலப்பு பொருளாதார அமைப்பு என்ற சொல்லை அனுமானிக்க.

5. Why industrial policy is needed?
தொழில் கொள்கை ஏன் தேவைப்படுகிறது?

6. What is the relationship of government with the business?
வணிகத்துடன் அரசாங்கத்தின் தொடர்பு என்ன?

7. State any two objectives of disinvestment.
முதலீட்டை விலக்குவதன் நோக்கங்களில் ஏதேனும் இரண்டினை கூறுக.

8. What are the needs for social responsibility of business?

வணிகத்தின் சமூகப் பொறுப்புக்கான தேவைகள் யாவை?

9. Give the meaning of joint sectors enterprises.

கூட்டுத் துறை நிறுவனத்தின் பொருளைத் தருக.

10. How do cooperative societies contribute to the Indian economy?

இந்தியப் பொருளாதாரத்திற்கு கூட்டுறவு சங்கங்கள் எவ்வாறு பங்களிக்கின்றன?

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions choosing either (a) or (b).

11. (a) List out the importance of the business environment.

வணிகச் சூழலின் முக்கியத்தவத்தை பட்டியலிடுக.

Or

(b) Indicate the impact of Indian culture on business.

வணிகத்தில் இந்திய கலாச்சாரத்தின் தாக்கத்தை குறிப்பிடுக.

12. (a) Assess the important role of Foreign direct investment.

அந்நிய நேரடி முதலீட்டின் முக்கிய பங்கை மதிப்பிடுக.

Or

(b) Illustrate the components of the financial system of India.

இந்தியாவிலுள்ள நிதி அமைப்பின் கூறுகளை விளக்குக.

13. (a) Narrate the objectives of the new economic policy.

புதிய பொருளாதாரக் கொள்கையின் நோக்கங்களை எடுத்துரைக்க.

Or

(b) What are the disadvantages of privatisation?

தனியார்மயமாக்கலின் தீமைகள் யாவை?

14. (a) Explain the future trends in globalisation.

உலகமயமாக்கலின் எதிர்கால போக்குகளை விளக்குக.

Or

(b) Outline the objectives and functions of WTO.

WTO-வின் நோக்கங்கள் மற்றும் பணிகளை கோடிட்டுக் காட்டுக.

15. (a) Distinguish the public sector from the private sectors.

தனியார் துறையிலிருந்து பொதுத் துறையை வேறுபடுத்துக.

Or

(b) Describe the features of mixed economic system in India.

இந்தியாவிலுள்ள கலப்பு பொருளாதார அமைப்பின் அம்சங்களை விவரிக்க.

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Discuss the factors influencing the economic environment of business.

வணிகத்தின் பொருளாதாரச் சூழலை தூண்டக்கூடிய காரணிகளைப் பற்றி விவாதிக்க.

17. Critically evaluate the effects of political environment on a business firm.

ஒரு வணிக நிறுவனத்தின் மீதான அரசியல் சூழலின் விளைவுகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்க.

18. Elaborate on the positive and negative impact of industrial policy of India.

இந்தியாவிலுள்ள தொழில் கொள்கையின் நேர்மறை மற்றும் எதிர்மறை தாக்கத்தை விரிவாகக் கூறுக.

19. Examine the social responsibility of a firm towards groups of the society.

சமுதாயத்தின் குழுக்களுக்கு ஒரு நிறுவனத்தின் சமூகப் பொறுப்பை ஆராய்க.

20. Describe the role of public sectors in Indian economic development.

இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் பொதுத் துறைகளின் பங்கை விவரிக்க.

———————

D–4229

Sub. Code
10214/12314/0214

DISTANCE EDUCATION

Common for B.Com./B.Com. (CA) DEGREE EXAMINATION, MAY 2024.

First Semester

FINANCIAL ACCOUNTING

(CBCS 2018-19 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer ALL the questions.

1. Define Accounting.
கணக்கியலை வரையறுக்க.

2. What do you mean by double entry system?
இரட்டை பதிவு முறை பற்றி நீவீர் அறிவது என்ன?

3. State the methods of preparing trial balance.
இருப்பாய்வை தயாரிக்கும் முறைகளைக் குறிப்பிடவும்.

4. What is meant by error?
பிழை பற்றி அறிவது என்ன?

5. Who are all the parties involved in bills of exchange?
மாற்றுச்சீட்டில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினர்கள் யாவர்?

6. Why Bank Reconciliation Statement is prepared?
வங்கி சரிகட்டும் பட்டியல் ஏன் தயாரிக்கப்படுகிறது?

7. State two importance of Depreciation.
தேய்மானத்தின் இரண்டு முக்கியத்துவத்தைக் கூறவும்.

8. What is fixed capital?
நிலை முதல் என்றால் என்ன?

9. Define "Company".
"நிறுமம்" வரையறுக்க.

10. What is meant by Shares?
பங்குகள் பற்றி அறிவது என்ன?

PART B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) Journalise the following transactions :

(i) Purchased goods for cash Rs. 12,000

(ii) Purchased stationery for cash Rs. 600

(iii) Furniture purchased for Rs. 35,000

(iv) Cash sales Rs.8,500

(v) Interest paid for Rs. 700

பின்வரும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிவு செய்யவும்.

(i) ரொக்கமாக பொருட்களை கொள்முதல் செய்தது ரூ. 12,000

(ii) எழுதுபொருள் வாங்கியது ரூ. 600

(iii) அறைகலன் வாங்கியது ரூ. 35,000

(iv) ரொக்க விற்பனை ரூ. 8,500

(v) வட்டி செலுத்தியது ரூ. 700

Or

(b) State the objectives of accounting.
கணக்கியலின் நோக்கங்களைக் குறிப்பிடவும்.

12. (a) From the following information, prepare trading account.

(i) Opening stock Rs. 30,000

(ii) Purchases Rs. 60,000

(iii) Return outward Rs. 750

(iv) Sales Rs. 1,77,000

(v) Return inward Rs. 1,000

(vi) Closing stock Rs. 35,000

பின்வரும் தகவலிலிருந்து, வியாபார கணக்கைத் தயாரிக்கவும்.

(i) தொடக்க சரக்கிருப்பு ரூ. 30,000

(ii) கொள்முதல் ரூ. 60,000

(iii) வெளி திருப்பம் ரூ. 750

(iv) விற்பனை ரூ. 1,77,000

(v) உள் திருப்பம் ரூ. 1,000

(vi) இறுதி சரக்கிருப்பு ரூ. 35,000

Or

(b) State the aim of preparing final accounts.

இறுதி கணக்குகளைத் தயாரிப்பதன் நோக்கங்களை குறிப்பிடவும்.

13. (a) (i) Bank balance as per cash book Rs.200

(ii) Cheque deposited but not collected Rs. 1,500

(iii) Cheque issued but not presented for payment Rs.2,500

(iv) Bank charges debited in the pass book Rs.200

(v) Interest entered in the pass book Rs. 100

Prepare Bank Reconciliation Statement.

(i) ரொக்க ஏட்டின் படி வங்கி இருப்பு ரூ. 200

(ii) காசோலை வங்கியில் செலுத்தியும் வசூலிக்கப்படாதவை ரூ. 1,500

(iii) வழங்கப்பட்ட காசோலை வங்கியில் சமர்பிக்கப்படாதவை ரூ. 2,500

(iv) செல்லேட்டில் பற்று வைக்கப்பட்டுள்ள வங்கிக் கட்டணம் ரூ. 200

(v) செல்லேட்டில் பதியப்பட்டுள்ள வட்டி ரூ. 100

வங்கி சரிகட்டும் பட்டியலை தயார் செய்க.

Or

(b) List out the characteristics of Bill of Exchange.

மாற்றுச்சீட்டின் பண்புகளை பட்டியலிடுக.

14. (a) On 01.01.2021, A,B,C entered into partnership contributing Rs. 2,50,000, Rs. 1,30,000 and Rs. 1,20,000 respectively and sharing profit in the ratio of 5:3:2. B and C are entitled to a salary of Rs. 16,000 and Rs 14,000 respectively per year. Interest on capital is to be allowed at 5% p.a. Interest on drawings is to be charged at 5% During the year A withdrew Rs.40,000, B Rs.25,000 and C Rs. 15,000. Profit in 2021 before the above mentioned adjustment was Rs.71,400. Prepare profit and loss appropriation account.

0.1.01.2021 அன்று, A, B, C முறையே ரூ. 2,50,000, ரூ. 1,30,000 மற்றும் ரூ. 1,20,000 பங்களிப்பை அளித்து, 5:3:2 என்ற விகிதத்தில் லாபத்தைப் பகிர்ந்துகொண்டு கூட்டாண்மைக்குள் நுழைந்தனர். B மற்றும் C ஆண்டுக்கு முறையே ரூ. 16,000 மற்றும் ரூ. 14,000 சம்பளம் பெற உரிமை உண்டு. முதல் மீதான வட்டி ஆண்டுக்கு 5% அனுமதிக்கப்பட வேண்டும். எடுப்பு மீதான வட்டி 5% அனுமதிக்கப்படும். அவ்வாண்டில் A ரூ. 40,000. ரூ. 25,000 மற்றும் C ரூ. 15,000 திரும்ப எடுத்துக் கொண்டனர். மேலே குறிப்பிடப்பட்ட சரிக்கட்டுதலுக்கு முன் 2021இல் லாபம் ரூ. 71,400 இலாப மற்றும் நட்ட பகிர்வு கணக்கை தயார் செய்யவும்.

Or

(b) What are the steps to be taken for admission of a partner?

ஒரு கூட்டாளியை சேர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய படிநிலைகள் யாவை?

15. (a) Anbu ltd., issued 4,000, 6% redeemable preference shares of Rs. 100 each fully paid when the shares become due for redemption, the company decided as follows :

(i) to issue 5,000, 10% Debentures of Rs. 100 each.

(ii) to issue 40,000 equity shares of Rs. 10 each @ a premium of Rs. 2 per share

(iii) to redeem preference shares @ 5% premium

(iv) to sell the investment at book value for Rs. 50,000.

Give journal entries.

அன்பு லிமிடெட் 4,000, 6% மீட்டெடுக்கக்கூடிய முன்னுரிமைப் பங்குகள்.

ஒவ்வொன்றும் ரூ. 100 வீதம் முழுமையாக செலுத்தப்பட்ட பங்குகளை வெளியிட்டது. பங்குகள் மீட்பிற்கு நிறுமம் பின்வருமாறு முடிவு செய்தது.

(i) 5,000, 10% கடன் பத்திரங்களை ரூ. 100 வீதம் வெளியிட வேண்டும்.

(ii) 40,000 சம பங்குகளை ரூ. 10 வீதம் ஒரு பங்கிற்கு ரூ. 2 முனைமத்தில் ஒவ்வொன்றும் வெளியிட வேண்டும்.

(iii) முன்னுரிமைப் பங்குகளை 5% முனைமத்தில் மீட்டெடுக்க வேண்டும்

(iv) முதலீடுகளை புத்தக மதிப்பில் ரூ. 50,000க்கு விற்க வேண்டும்.

குறிப்பேடு பதிவுகளை தருக.

Or

(b) Explain the following :

(i) Forfeiture of Shares

(ii) Reissue of shares

பின்வருபவனவற்றை விளக்குக :

(i) பங்குகளை பறிமுதல் செய்தல்

(ii) பங்குகளை மறுவெளியீடு செய்தல்

PART C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Explain the concept of accounting.

கணக்கியலின் கருத்துக்களை விளக்குக.

17. From the following particulars, Prepare Trading, Profit and Loss account and Balance Sheet as on 31.12.2013

Particulars	Debit	Credit
	Rs.	Rs.
Capital		40,000
Sales		25,000
Purchase	15,000	
Salaries	2,000	
Rent	1,500	
Insurance	300	
Drawings	5,000	
Machinery	28,000	
Cash at bank	4,500	
Cash in hand	2,000	
Stock on 1.1.2013	5,200	
Debtors	2,500	
Creditors		1,000
	66,000	66,000

Adjustments :

(a) Stock on 31.12.2013 Rs. 4,900

(b) Salaries unpaid Rs. 300

(c) Rent paid in advance Rs.200

(d) Insurance prepaid Rs.90.

பின்வரும் விவரங்களிலிருந்து 31.12.2013 அன்றைய வியாபார, இலாப மற்றும் நட்ட கணக்கு மற்றும் இருப்புநிலை குறிப்பை தயார் செய்யவும்.

விபரங்கள்	பற்று	வரவு
	ரூ.	ரூ.
முதல்		40,000
விற்பனை		25,000
கொள்முதல்	15,000	
சம்பளம்	2,000	
வாடகை	1,500	
காப்பீடு	300	
எடுப்பு	5,000	
இயந்திரங்கள்	28,000	
வங்கியில் பணம்	4,500	
கையில் பணம்	2,000	
01.01.2013 அன்று சரக்கிருப்பு	5,200	
கடனாளிகள்	2,500	
கடனீந்தோர்		1,000
	66,000	66,000

சரிக்கட்டுதல்கள் :

(அ) 31.12.2013 அன்று சரக்கிருப்பு ரூ. 4,900

(ஆ) கொடுபடவேண்டிய சம்பளம் ரூ. 300

(இ) முன்கூட்டி செலுத்திய வாடகை ரூ. 200

(ஈ) முன்கூட்டி செலுத்திய காப்பீடு ரூ. 90

18. On 01.01.2020, Balan drew a bill of exchange for Rs. 1,200 payable after 3 months. Krishna accepted it and sent it to Balan who discounted the same with the bank at 5% pa. In the due date the bill is dishonoured. Give journal entries in the books of Balan and Krishna.

0.1.01.2020 அன்று, பாலன் மூன்று மாதங்களுக்குப் பிறகு செலுத்த வேண்டிய ரூ. 1,200க்கான மாற்றுச்சீட்டை எழுதினார். கிருஷ்ணா அதை ஏற்று பாலனுக்கு அனுப்பினார், அதை வங்கியில் ஆண்டுக்கு 5% தள்ளுபடி செய்தார். உரிய தேதியில் மாற்றுச்சீட்டானது அவமதிக்கப்பட்டது. கிருஷ்ணா மற்றும் பாலன் புத்தகங்களில் குறிப்பேடு பதிவுகளை தருக.

19. A and B are partners sharing profits in the ratio of 3:1. On 31.12.2020 their balance sheet stood as follows :

	Rs.		Rs.
Creditors	37,500	Bank	22,500
General Reserve	4,000	Bills Receivable	3,000
A's Capital	30,000	Debtors	16,000
B's Capital	16,000	Stock	20,000
		Furniture	1,000
		Building	25,000
	87,500		87,500

They admit 'C' into partnership on January 1, 2020 subject to the following terms :

(a) That 'C' pays Rs. 10,000 as capital for a fifth share in future profit.

(b) Goodwill account to be raised in the books of the new firm for Rs. 10,000

(c) Stock and Furniture to be reduced by 10% and provide 5% reserve for doubtful debts.

(d) Building to be appreciated by 20%

Prepare necessary ledger accounts of the new firm.

A மற்றும் B ஆகியவர்கள் 3:1 என்ற விகிதத்தில் லாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் கூட்டாளிகள். 31.12.2020 அன்று அவர்களின் இருப்புநிலை குறிப்பு பின்வருமாறு.

	ரூ.		ரூ.
கடனீந்தோர்	37,500	வங்கி	22,500
பொது காப்பு	4,000	மாற்றுச்சீட்டு	3,000
A இன் முதல்	30,000	கடனாளிகள்	16,000
B இன் முதல்	16,000	சரக்கிருப்பு	20,000
		அறைகலன்	1,000
		கட்டிடம்	25,000
	87,500		87,500

பின்வரும் விதிமுறைகளுக்கு உட்பட்டு ஜனவரி 1, 2020 அன்று அவர்கள் 'C' ஐ கூட்டாண்மைக்குள் சேர்த்துக் கொள்கிறார்கள்.

(அ) 'C' எதிர்கால இலாபத்திற்காக ஐந்தாவது பங்குக்கான முதலாக ரூ. 10,000 செலுத்துகிறார்.

(ஆ) புதிய நிறுவனத்தின் புத்தகங்களில் நற்பெயர் கணக்கு ரூ. 10,000க்கு உயர்த்தப்பட உள்ளது.

(இ) சரக்கிருப்பு மற்றும் அறைகலன் மீது 10% குறைக்கப்படும் மற்றும் சந்தேகத்திற்குரிய கடன்களுக்கு 5% இருப்பு உருவாக்குக.

(ஈ) கட்டிடத்தின் மதிப்பு 20% அதிகரிக்கப்பட வேண்டும்.

புதிய நிறுவனத்திற்கு தேவையான பேரேட்டு கணக்குகளை தயார் செய்க.

20. "Z" ltd., invited applications for 10,000 shares of Rs. 10 each at a discount of 10% payable as follows: On application Rs.3, On allotment Rs.3, On First and final call Rs.3. Applications were received for all the shares and subscribed. All money due was received except the first and final call on 500 shares. These shares were forfeited and re-issued at Rs.8 per share. Pass necessary journal entries in the books of the company.

"Z" நிறுமம் 10,000 பங்குகளுக்கான விண்ணப்பங்களை ரூ. 10 வீதம் 10% தள்ளுபடியில் கீழ்க்கண்டவாறு செலுத்தப்படி அழைப்பு விடுத்தது. விண்ணப்பத்தில் ரூ. 3, ஒதுக்கீட்டில் ரூ. 3, முதல் மற்றும் இறுதி அழைப்பின்போது ரூ. 3. அனைத்து பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. 500 பங்குகளில் முதல் மற்றும் இறுதி அழைப்பு தவிர அனைத்து பணமும் முறையாக பெறப்பட்டது. இந்தப் பங்குகள் பறிமுதல் செய்யப்பட்டு, பங்கு ஒன்றுக்கு ரூ. 8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. நிறுமத்தின் புத்தகங்களில் தேவையான குறிப்பேடு பதிவுகளை தருக.

———————

D–4230

Sub. Code
10221/12321/ 0221

DISTANCE EDUCATION

COMMON FOR B.Com./B.Com. (CA) DEGREE EXAMINATION, MAY 2024

Second Semester

FINANCIAL MANAGEMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL questions.

1. Define Financial Management.

   நிதி மேலாண்மையை வரையறுக்க.

2. What do you mean by Rule 69?

   விதி 69 பற்றி நீவிர் அறிவது என்ன?

3. Define the term Cost of capital.

   மூலதன செலவு என்ற சொல்லை வரையறுக்க.

4. What is financial leverage?

   நிதிநிலை நெம்புகோல் என்றால் என்ன?

5. State any two merits of payback period method.

   திருப்பிச் செலுத்தும் கால முறையின் ஏதேனும் இரண்டு நன்மைகளை குறிப்பிடவும்.

6. What is trading on equity?

   பங்கு வர்த்தகம் என்றால் என்ன?

7. Write a short note on bank credit.

வங்கிக் கடன் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதவும்.

8. Indicate any two nature of dividend policy.

ஈவுத்தொகைக் கொள்கையின் ஏதேனும் இரண்டு தன்மைகளைக் குறிப்பிடவும்.

9. What is Cash?

ரொக்கம் என்றால் என்ன?

10. Define working capital.

நடைமுறை மூலதனத்தை வரையறுக்க.

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions choose either (a) or (b).

11. (a) Discuss the approaches to financial management.

நிதி மேலாண்மைக்கான அணுகுமுறைகளைப் பற்றி விவாதிக்க.

Or

(b) Write a note on compounding method.

கூட்டு முறை பற்றி குறிப்பு எழுதவும்.

12. (a) State the significance of cost of capital.

மூலதனச் செலவின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடவும்.

Or

(b) Compare operating leverage with composite leverage.

இயக்க நெம்புகோலை கலப்பு நெம்புகோலுடன் ஒப்பிடுக.

13. (a) State the factors influencing capital budgeting decisions.

மூலதன திட்டமிடுதலின் முடிவுகளை பாதிக்கும் காரணிகளைக் குறிப்பிடவும்.

Or

(b) What are the characteristics of balanced capital structure?

சமநிலை மூலதன கட்டமைப்பின் சிறப்பியல்புகள் யாவை?

14. (a) List out the sources of short term finance.

குறுகிய கால நிதி ஆதாரங்களை பட்டியலிடுக.

Or

(b) State the merits and demerits of stable dividend policy.

நிலையான ஈவுத்தொகைக் கொள்கையின் நன்மைகள் மற்றும் தீமைகளைக் குறிப்பிடவும்.

15. (a) What are the advantages of working capital?

நடைமுறை மூலதனத்தின் நன்மைகள் யாவை?

Or

(b) Explain concentration banking in brief.

செறிவு வங்கியை பற்றி சுருக்கமாக விளக்கவும்.

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Discuss the various functions of a finance manager.

நிதி மேலாளரின் பல்வேறு பணிகளை விவாதிக்க.

17. Explain the different types of capital budgeting decisions.

மூலதன திட்டமிடுதல் முடிவுகளின் பல்வேறு வகைகளை விளக்குக.

18. What is weighted average cost of capital? State its significance.

எடையிட்ட சராசரி மூலதன செலவு என்றால் என்ன? அதன் முக்கியத்துவத்தை கூறுக.

19. Describe the different types of dividend policy.

ஈவுத்தொகை கொள்கையின் பல்வேறு வகைகளை விவரிக்க.

20. Enumerate the basic problems in cash management.

ரொக்க மேலாண்மையிலுள்ள அடிப்படை பிரச்சனைகளை கணக்கிடுக.

———————

D–4231

Sub. Code
10222/12322/ 0222

DISTANCE EDUCATION

COMMON FOR B.Com/B.Com. (CA) DEGREE EXAMINATION, MAY 2024

Second Semester

HUMAN RESOURCE MANAGEMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL questions.

1. What is Human Resource Management?
மனித வள மேலாண்மை என்றால் என்ன?

2. What is meant by Human Resource Planning?
மனித வள திட்டமிடுதல் பற்றி அறிவது என்ன?

3. What is job offer?
வேலை வாய்ப்பு என்றால் என்ன?

4. What is meant by recruitment?
ஆள் சேர்த்தல் பற்றி அறிவது என்ன?

5. Define the term training.
பயிற்சி எனும் பதத்தை வரையறுக்க.

6. What is performance appraisal?
செயல்திறன் மதிப்பீடு என்றால் என்ன?

7. What is meant by wages?

கூலி பற்றி அறிவது என்ன?

8. Give the meaning of incentive.

ஊக்குத்தொகையின் பொருளைத் தருக.

9. Define 'Grievance'.

மனக்குறையை வரையறுக்க.

10. What is Empowerment?

அதிகாரமளித்தல் என்றால் என்ன?

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions choose either (a) or (b).

11. (a) Bring out the duties of a HR manager.

HR மேலாளரின் கடமைகளை வெளிக்கொணர்க.

Or

(b) What are the barriers of effective human resource planning? Explain.

பயனுள்ள மனித வளத் திட்டமிடலின் தடைகள் யாவை? விளக்குக.

12. (a) What are the pre-requisites of a good recruitment policy?

ஒரு நல்ல ஆள் சேர்த்தல் கொள்கையின் முன்தேவைகள் யாவை?

Or

(b) Write down the essentials of a good selection procedure.

ஒரு நல்ல தேர்ந்தெடுத்தல் வழிமுறையின் அவசியத்தை எடுத்தெழுதுக.

13. (a) Point out essential features of a good training programme.

ஒரு நல்ல பயிற்சி திட்டத்தின் அவசியமான அம்சங்களை குறிப்பிடுக.

Or

(b) What are the limitations of performance appraisal?

செயல்திறன் மதிப்பீட்டின் குறைபாடுகள் யாவை?

14. (a) Outline the objectives of wages and salary administration.

கூலி மற்றும் சம்பள நிர்வாகத்தின் நோக்கங்கள கோடிட்டுக் காட்டுக.

Or

(b) Write short notes on :

(i) Halsey Plan

(ii) Rowan Plan.

சிறு குறிப்பு வரைக.

(i) ஹல்சி திட்டம்

(ii) ரோவான் திட்டம்.

15. (a) Distinguish between positive discipline and negative discipline.

நேர்மறை ஒழுக்கம் மற்றும் எதிர்மறை ஒழுக்கத்தை வேறுபடுத்துக.

Or

(b) What are the objectives of counseling?

ஆலோசனையின் நோக்கங்கள் யாவை?

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Distinguish between human resource management and personnel management.

மனித வள மேலாண்மை மற்றும் பணியாளர் மேலாண்மையை வேறுபடுத்துக.

17. Briefly explain the various internal sources of recruitment.

ஆள் சேர்த்தலின் பல்வேறு உள்மூலங்களை சுருக்கமாக விளக்குக.

18. Briefly discuss the various methods training.

பயிற்சியின் பல்வேறு முறைகளை சுருக்கமாக விவாதிக்க.

19. Explain the various factors influencing wage and salary administration.

கூலி மற்றும் சம்பள நிர்வாகத்தை தூண்டக்கூடிய பல்வேறு காரணிகளை விளக்குக.

20. Compare and contrast domestic and international HRM.

உள்நாட்டு மற்றும் சர்வதேச HRMஐ ஒப்பிட்டு எழுதுக.

———————

D–4232

Sub. Code
10223/12323/ 0223

DISTANCE EDUCATION

COMMON FOR B.Com./B.Com. (CA) DEGREE EXAMINATION, MAY 2024

Second Semester

MARKETING MANAGEMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL questions.

All questions carry equal marks.

1. What is marketing?
சந்தையியல் என்றால் என்ன?

2. What is meant by Social Marketing?
சமூக சந்தையியல் பற்றி அறிவது என்ன?

3. Write short notes on Marketing Strategies.
சந்தையில் யுக்திகள் பற்றி சிறு குறிப்பு வரைக.

4. What is meant by product life cycle?
பொருள் ஆயுள் சுழற்சி பற்றி அறிவது என்ன?

5. What do you understand by price policy?
விலைக் கொள்கை பற்றி நீவிர் அறிவது என்ன?

6. What is Branding?
வியாபாரக்குறி என்றால் என்ன?

7. Give the meaning of product mix.

பொருள் கலவை என்பதன் பொருள் தருக.

8. Define Advertising.

விளம்பரத்தை வரையறுக்க.

9. What do you mean by Market segmentation?

சந்தை பகுப்பு பற்றி நீவிர் அறிவது என்ன?

10. What is green marketing?

பச்சைநிற சந்தையியல் என்றால் என்ன?

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions choose either (a) or (b).

11. (a) What is marketing concept? What are its advantages?

சந்தையியல் கருத்து என்றால் என்ன? அதன் பயன்கள் யாவை?

Or

(b) Distinguish between marketing and selling.

சந்தையியல் மற்றும் விற்பனையை வேறுபடுத்துக.

12. (a) Explain the different stages in a product life cycle.

பொருள் ஆயுள் சுழற்சியின் பல்வேறு நிலைகளை விளக்குக.

Or

(b) Explain the different classification of goods.

பொருள்களின் பல்வேறு வகைகளை விளக்குக.

13. (a) What are the factors determining price determination?

விலை நிர்ணயத்தை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

Or

(b) Why do advertisement fail? Discuss.

ஏன் விளம்பரம் தோல்வி அடைகின்றன? விவாதிக்க.

14. (a) Explain the factors to be considered which developing a promotion mix.

மேம்பாட்டு கலவை உருவாக்குவதில் கவனத்தில் கொள்ள வேண்டிய காரணிகளை விளக்குக.

Or

(b) What are the objectives of promotion?

மேம்பாட்டின் நோக்கங்கள் யாவை?

15. (a) Explain the various elements of service marketing.

சேவை சந்தையிடுகையின் பல்வேறு கூறுகளை விளக்குக.

Or

(b) Discuss the benefits of market segmentation.

சந்தைப் பகுப்பின் நன்மைகளை விவாதிக்க.

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Describe the recent trends in marketing.

சந்தையியலின் இன்றைய போக்குகளை விவரிக்க.

17. Explain the important aspects of product planning.

பொருட்கள் திட்டமிடுதலின் முக்கிய அம்சங்களை விவரிக்க.

18. Explain the different types of pricing.

பல்வேறு வகையான விலைகளை பற்றி விவரிக்க.

19. State the advantages and disadvantages of online marketing.

இணையவழி சந்தையியலின் நன்மைகள் மற்றும் தீமைகளை குறிப்பிடுக.

20. Explain the need for market segmentation.

சந்தைப் பகுப்பின் அவசியத்தை விவரிக்க.

———————

D-4233

Sub. Code
10224/0224

DISTANCE EDUCATION

B.Com. DEGREE EXAMINATION, MAY 2024

Second Semester

MERCANTILE LAW

(CBCS 2018-19 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL questions.

1. What is meant by agreement?
ஒப்பந்தம் பற்றி அறிவது என்ன?

2. Who is called as 'agent' and 'principal'?
'முகவர்' மற்றும் 'முதல்வர்' என அழைக்கப்படுபவர் யார்?

3. What is partnership deed?
கூட்டாண்மை பத்திரம் என்றால் என்ன?

4. Define Cheque.
காசோலையை வரையறுக்க.

5. What do you mean by incorporation?
கூட்டுறுவாக்கம் பற்றி நீவிர் அறிவது என்ன?

6. What is Compliant?
புகார் என்றால் என்ன?

7. What do you mean by Copy rights?
காப்புரிமை பற்றி நீவிர் அறிவது என்ன?

8. Write a note on WTO Agreements.

WTO ஒப்பந்தங்கள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

9. What is e-governance?

மின் ஆளுமை என்றால் என்ன?

10. Write down the Electronic Records.

மின்னணு பதிவுகளை எழுதுக.

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer ALL questions choosing either (a) or (b).

11. (a) Bring out the main sources of Indian mercantile law.

இந்திய வணிகச் சட்டத்தின் முக்கிய ஆதாரங்களை வெளிக்கொணர்க.

Or

(b) What are the modes of discharge of a contract?

ஒப்பந்தத்தை விடுவிப்பதற்கான முறைகள் யாவை?

12. (a) What are the essential characteristics of a contract of sale?

விற்பனை ஒப்பந்தத்தின் முக்கிய பண்புகள் யாவை?

Or

(b) Write down the essential features of the partnership.

கூட்டாண்மையின் அத்தியாவசிய அம்சங்களை எழுதுக.

13. (a) What are the characteristics of a company?

ஒரு நிறுமத்தின் குணாதிசியங்கள் யாவை?

Or

(b) State the objectives of the Consumer Protection Act, 1986.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986 இன் நோக்கங்களைக் குறிப்பிடவும்.

14. (a) What is the meaning and scope of the Competition Act 2002?

போட்டி சட்டம் 2002 இன் பொருள் மற்றும் எல்லைகள் யாவை?

Or

(b) Explain the different types of trade marks in brief.

பல்வேறு வகையான வர்த்தக முத்திரைகளை சுருக்கமாக விளக்குக.

15. (a) Describe the provisions of Information Technology Act, 2000 relating to digital signature certificate.

இலக்கமுறை கையொப்பச் சான்றிதழுடன் தொடர்புடைய தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 இன் ஷரத்துக்களை விவரிக்கவும்.

Or

(b) List out the salient features of MSME Act.

MSME சட்டத்தின் முக்கிய அம்சங்களை பட்டியலிடுக.

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Discuss the various methods of contracts.

ஒப்பந்தத்தின் பல்வேறு முறைகளை விவாதிக்கவும்.

17. What are the differences between bill of exchange and promissory note?

மாற்றுசீட்டு மற்றும் உறுதிமொழி சீட்டிற்குமிடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

18. Explain the various rights of consumers as enunciated by the Consumer Protection Act 1986.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986இன் கீழ் நுகர்வோருக்கான பல்வேறு உரிமைகளை விளக்கவும்.

19. Explain the various offences and penalties under the Competition Act, 2002.

போட்டிச் சட்டம், 2002ன் கீழ் உள்ள பல்வேறு குற்றங்கள் மற்றும் தண்டனைகளை விளக்கவும்.

20. Discuss the duties of 'Certifying Authority' under the Information Technology Act, 2000.

தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000-த்தின் கீழ் 'சான்றளிக்கும் ஆணையத்தின்' கடமைகளைப் பற்றி விவாதிக்கவும்.

———————

D–4234	Sub. Code
	10231/12531

DISTANCE EDUCATION

B.Com./B.Com. (Lateral Entry) DEGREE EXAMINATION, MAY 2024.

Third Semester

E-COMMERCE

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL questions.

1. Define E-commerce.
மின்னணு வணிகத்தை வரையறுக்க.

2. List out the various activities involved in E-commerce.
மின்னணு வணிகத்தில் அடங்கியுள்ள பல்வேறு செயல்பாடுகளை பட்டியலிடுக.

3. Infer the term Metadata.
மெட்டாடேட்டா என்ற சொல்லை ஊகித்து எழுதுக.

4. List out the various elements of Internet.
இணையத்தின் பல்வேறு கூறுகளை பட்டியலிடுக.

5. How firewall help for security?
பாதுகாப்புக்கு ஃபயர்வால் எப்படி உதவுகிறது?

6. Write any two limitations of traditional marketing.
பாரம்பரிய சந்தைப்படுத்தலின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளை எழுதுக.

7. What is meant by SCM?

SCM பற்றி அறிவது என்ன?

8. What do you mean by Enterprise Customer Management?

நிறுவன வாடிக்கையாளர் மேலாண்மை பற்றி நீவிர் அறிவது என்ன?

9. Expand : Epay and Paypal.

Epay மற்றும் Paypal ஆகியவற்றை விரிவாக்குக.

10. Give the meaning wireless millennium.

வயர்லெஸ் மில்லினியம் என்பதன் பொருளைக் கூறுக.

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL the questions, choosing either (a) or (b).

11. (a) Enumerate the various types of E-business model.

மின்னணு வணிக மாடல்களின் பல்வேறு வகைகளை பட்டியலிடுக.

Or

(b) How Internet has helped in the growth of e-commerce?

மின்னணு வணிக வளர்ச்சிக்கு இணையம் எப்படி உதவுகிறது?

12. (a) Define enterprise information portal. What are the advantages of Portal in E-commerce?

நிறுவன தகவல் இணையமுகப்பை வரையறுக்க. மின்னணு வணிகத்தில் இணையமுகப்பின் நன்மைகள் யாவை?

Or

(b) State the meaning of FTP, WWW and SMTP.

FTP, WWW மற்றும் SMTP ஆகியவற்றின் பொருளைக் கூறுக.

13. (a) Illustrate the major types of network security threats and vulnerability.

வலைப்பின்னல் பாதுகாப்பில் உள்ள அச்சுறுத்தல்கள் மற்றும் பாதிப்புகளின் முக்கிய வகைகளை விளக்குக.

Or

(b) Outline the steps involved in implementing an enterprise wide security framework in e-commerce environment.

மின்னணு வணிக சூழலில் ஒரு நிறுவன அளவிலான பாதுகாப்பு கட்டமைப்பை செயல்படுத்துவதில் உள்ள படிகளை கோடிட்டுக் காட்டுக.

14. (a) Explain the electronic logistics and its implementation in e-commerce.

மின்னணு வணிகத்தில் மின்னணு தளவாடங்கள் மற்றும் அதன் செயலாக்கம் ஆகியவற்றை விளக்குக.

Or

(b) What are the techniques used in decision support system for CRM?

CRMக்கான முடிவு ஆதரவு அமைப்பில் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் யாவை?

15. (a) What are the four dimensions of mobile computing?

மொபைல் கம்ப்யூட்டிங்கின் நான்கு பரிமாணங்கள் யாவை?

Or

(b) Indicate the recent trends in making online payment.

இணையவழியாக பணம் செலுத்துவதிலுள்ள சமீபத்திய போக்குகளைக் குறிப்பிடுக.

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Explain the components and factors for the development of E-commerce.

மின்னணு வணிகத்தின் வளர்ச்சிக்கான கூறுகள் மற்றும் காரணிகளை விளக்குக.

17. Explain the following :

(a) TCP (b) IP (c) HTTP (d) POP (e) ISP.

பின்வருபவனவற்றை விளக்குக:

(அ) TCP (ஆ) IP (இ) HTTP (ஈ) POP (உ) ISP.

18. Examine the advantages, disadvantages and important application of XML.

XMLலின் நன்மைகள், தீமைகள் மற்றும் முக்கியமான பயன்பாடுகளை ஆராய்க.

19. Elaborate on the process of CRM and application of Electronic CRM.

CRMன் செயல்முறை மற்றும் மின்னணு CRMன் பயன்பாடுகளை விரிவாக கூறுக.

20. Discuss the knowledge management strategies for different organisation and also knowledge creating process.

பல்வேறு நிறுவனங்களுக்கான அறிவு மேலாண்மை உத்திகள் மற்றும் அறிவை உருவாக்கும் செயல்முறைகளை பற்றி விவாதிக்க.

———————

D–4235

Sub. Code
10232/12532

DISTANCE EDUCATION

B.Com./B.Com. (Lateral Entry) DEGREE EXAMINATION,
MAY 2024.

Third Semester

AUDITING

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL the questions.

1. What is Cost audit?
செலவு தணிக்கை என்றால் என்ன?

2. What is Voucher?
சான்றாய்வு என்றால் என்ன?

3. What is meant by Internal Control?
அக கட்டுப்பாடு பற்றி அறிவது என்ன?

4. Give the meaning of General Ledger.
பொதுக் பேரேட்டை பற்றி பொருள் கூறுக.

5. What is Company audit?
நிறுவன தணிக்கை என்றால் என்ன?

6. Trace the meaning of Calls in arrear.
அழைப்பு நிலுவை எனும் பொருளை தருவிக்க.

7. How do you conduct branch audit?

கிளை தணிக்கையை எப்படி நடத்துவாய்?

8. Who is appoints statutory auditor?

சட்டப்பூர்வ தணிக்கையாளரை நியமிப்பவர் யார்?

9. What are the receipts of a club?

ஒர மனமகிழ் மன்றத்தின் பெறுதல்கள் யாவை?

10. What is Electronic auditing?

மின்னணு தணிக்கை என்றால் என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL the questions, choosing either (a) or (b).

11. (a) What are the characteristics of good internal control?

சிறந்த அகக்கட்டுப்பாட்டின் குணாதிசயங்கள் யாவை?

Or

(b) What are the points to be noted by the auditor while vouching payment of wages?

கூலி செலுத்துவதற்கான ஆதாரச்சீட்டு தணிக்கையின் போது தணிக்கையாளர் கவனிக்க வேண்டிய நெறிமுறைகள் யாவை?

12. (a) What are the different types of assets?

சொத்துக்களின் பல்வேறு வகைகள் யாவை?

Or

(b) Enumerate the rules of verification.

சரிபார்த்தலின் விதிகளை எடுத்தியம்புக.

13. (a) Explain the procedure for the removal of an auditor.

தணிக்கையாளரை அகற்றுவதற்கான நடைமுறையை விளக்குக.

Or

(b) Explain the powers of an auditor of a company.

கம்பெனித் தணிக்கையாளாரின் அதிகாரங்களை விவரிக்க.

14. (a) What are the advantages of branch audit?

கிளை தணிக்கையின் நன்மைகள் யாவை?

Or

(b) What are the duties of Cost auditor?

செலவு தணிக்கையாளரின் கடமைகள் யாவை?

15. (a) Describe the liabilities of company auditor.

நிறுவன தணிக்கையாளரின் பொறுப்புகளை விவரிக்கவும்.

Or

(b) What are the objectives of investigation?

புலனாய்வின் நோக்கங்கள் யாவை?

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Briefly discuss the objects of an audit.

ஒரு தணிக்கையின் நோக்கங்களை சுருக்கமாக விவாதிக்க.

17. What are the points to be kept in mind by the auditor while verifying stock in trade?

சரக்கிருப்பை சரிபார்க்கும் போது தணிக்கையாளர் தனது மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டிய நெறிமுறைகள் யாவை?

18. Explain the different modes of appointment of company auditors.

நிறும தணிக்கையாளர்கனை நியமனம் செய்வதற்கான வெவ்வேறு வழிகளை விளக்குக.

19. What is meant by statutory audit? Bring out its advantages and disadvantages.

சட்டமுறை தணிக்கை என்றால் என்ன? அதனுடைய தன்மைகள் மற்றும் தீமைகளை வெளிக்கொணர்க.

20. Discuss about the audit of cinema theatre.

சினிமா தியேட்டர் தணிக்கையை பற்றி விவாதிக்கவும்.

———————

D–4236	Sub. Code
	10233/12533/12333/12833

DISTANCE EDUCATION

Common for B.Com./B.Com. (L.E.)/B.Com. (CA)/
B.Com. (CA) (L.E.) DEGREE EXAMINATION, MAY 2024.

Third Semester

MERCHANT BANKING AND FINANCIAL SERVICES

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL questions.

1. Define Merchant Banking.
வணிக வங்கியியலை வரையறுக்க.

2. What do you mean by Right Issue?
உரிமை வெளியீடு பற்றி நீவிர் அறிவது என்ன?

3. What is meant by Call Options?
அழைப்பு விருப்பங்கள் பற்றி அறிவது என்ன?

4. Define Global Depository Receipt.
உலகளாவிய வைப்புத் தொகை ரசீதை வரையறுக்க.

5. What do you mean by Hire Purchase?
வாடகை கொள்முதல் பற்றி நீவிர் அறிவது என்ன?

6. Are mutual funds risk-free?
பரஸ்பர நிதி ஆபத்து இல்லாதது?

7. What is Merger?

இணைப்பு என்றால் என்ன?

8. What is the main objective of Portfolio Theory?

இலாகா முதலீட்டு பட்டியல் கோட்பாட்டின் முக்கிய நோக்கம் என்ன?

9. What do you mean by Venture Capital?

துணிகர முதலீடு பற்றி நீவிர் அறிவது என்ன?

10. What is Factoring?

ஏட்டுக்கடன்தரகு என்றால் என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) Distinguish between public offer and offer for sale on stock exchange.

பங்கு சந்தை மீதான பொது முனைவு மற்றும் விற்பனைக்கான முனைவை வேறுபடுத்துக.

Or

(b) What are the main functions of financial system?

நிதி அமைப்பின் முக்கிய செயல்பாடுகள் யாவை?

12. (a) What are the main features of financial services?

நிதிச் சேவைகளின் முக்கிய அம்சங்கள் யாவை?

Or

(b) What are the benefits of depository system?

வைப்பு முறைமையின் நன்மைகள் யாவை?

13. (a) Distinguish between financial lease and operating lease.

நிதிக் குத்தகை மற்றும் செயல்முறைக் குத்தகையை வேறுபடுத்துக.

Or

(b) Explain the significance of mutual funds.

பரஸ்பர நிதிகளின் முக்கியத்துவத்தை விளக்குக.

14. (a) Explain the main features of hire purchase.

வாடகை கொள்முதலின் முக்கிய அம்சங்களை விளக்குக.

Or

(b) Explain the significance of portfolio management.

இலாகா முதலீட்டு பட்டியல் மேலாண்மையின் முக்கியத்துவத்தை விளக்குக.

15. (a) What are the benefits of securitization?

பத்திரமயமாக்கலின் நன்மைகள் யாவை?

Or

(b) Explain the main features of venture capital.

துணிகர முதலீட்டின் முக்கிய அம்சங்களை விளக்குக.

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Discuss how the financial system contributes to a country's economic development.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நிதி அமைப்பு எவ்வாறு பங்களிக்கிறது என்பதைப் பற்றி விவாதிக்க.

17. Discuss in detail about the evaluation of Global Depository Receipt.

உலகளாவிய வைப்புத் தொகை ரசீது மதிப்பீடு பற்றி விரிவாக விவரிக்க.

18. Explain the different types of lease.

குத்தகையின் பல்வேறு வகைகளை விளக்குக.

19. Explain any ten steps involved in mergers and acquisition deal process.

இணைப்புகள் மற்றும் கையகப்படுத்தல் ஒப்பந்தச் செயல்பாட்டில் உள்ள ஏதேனும் பத்து படிகளை விளக்குக.

20. Explain the functions of stock exchange in detail.

பங்குச் சந்தையின் செயல்பாடுகளை விரிவாக விளக்குக.

———————

D–4237	Sub. Code
	10234/12534/12334/12834

DISTANCE EDUCATION

Common for B.Com./B.Com. (L.E.)/B.Com. (CA)/
B.Com. (CA) (L.E.) DEGREE EXAMINATION, MAY 2024.

Third Semester

MANAGERIAL ECONOMICS

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer ALL questions.

1. Define the term Managerial Economics.
மேலாண்மை பொருளியல் என்ற சொல்லை வரையறுக்கவும்.

2. What is elasticity of demand?
தேவை நெகிழ்ச்சி என்றால் என்ன?

3. What is Market Equilibrium?
சந்தை சமநிலை என்றால் என்ன?

4. What is Sunk Costs?
மூழ்கிய செலவுகள் என்றால் என்ன?

5. What do you mean by Cost analysis?
செலவு பகுப்பாய்வு பற்றி நீவிர் அறிவது என்ன?

6. What is Profit?
இலாபம் என்றால் என்ன?

7. What is Monopoly?

முற்றுரிமை என்றால் என்ன?

8. List out the Industry analysis.

தொழில் பகுப்பாய்வை பட்டியலிடுக.

9. What is Accelerator effect?

முடுக்கி விளைவு என்றால் என்ன?

10. What is Business Cycle?

வணிக சுழற்சி என்றால் என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) Bring out the nature of managerial economics.

மேலாண்மை பொருளியலின் தன்மைகளை வெளிக் கொணர்க.

Or

(b) Briefly explain the functions of a Managerial Economist.

ஒரு மேலாண்மை பொருளாதர வல்லுநரின் செயல்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

12. (a) Explain law of supply in brief.

அளிப்பு விதியை சுருக்கமாக விளக்குக.

Or

(b) State and explain factors of production.

உற்பத்திக் காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

13. (a) Elaborate on the Profit maximization models.

இலாபத்தைப் பெருக்கும் மாதிரியை விவரிக்க.

Or

(b) What are the objectives of the pricing policy?

விலையிடல் கொள்கையின் நோக்கங்கள் யாவை?

14. (a) Briefly explain the various types of price leadership.

விலையிடல் தலைமைத்துவத்தின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விளக்கவும்.

Or

(b) Explain the various types of duopoly.

இருவர் முற்றுமையிடல் சந்தையின் பல்வேறு வகைகளை விளக்கவும்.

15. (a) Write a short note on Instruments of Stabilization Policy.

நிலைப்படுத்தல் கொள்கையின் கருவிகள் பற்றி ஒரு சிறு குறிப்பை எழுதவும்.

Or

(b) Briefly explain the different kinds of inflation.

பல்வேறு வகையான பணவீக்கத்தை சுருக்கமாக விளக்குக.

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Discuss the various types of elasticity of demand.

தேவை நெகிழ்ச்சியின் பல்வேறு வகைகளை விவாதிக்கவும்.

17. What are the factors determining elasticity of supply?

அளிப்பு நெகிழ்ச்சியை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

18. Explain the different methods of Pricing.
விலையிடலின் வெவ்வேறு முறைகளை விளக்குக.

19. Explain the various types of market structures.
பல்வேறு வகையான சந்தை கூட்டமைப்புகளை விளக்குக.

20. State and explain the features of business cycle.
வணிகச் சுழற்சியின் அம்சங்களைக் குறிப்பிட்டு விளக்கவும்.

———————

D–4238	Sub. Code
	10241/12541/12341/12841

DISTANCE EDUCATION

Common for B.Com./B.Com. (L.E.)/B.Com. (CA)/
B.Com. (CA) (L.E.) DEGREE EXAMINATION, MAY 2024.

Fourth Semester

INSURANCE MANAGEMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL the questions.

1. What is Uncertainly?
   உறுதியற்ற தன்மை என்றால் என்ன?

2. Define Insurance.
   காப்பீடு வரையறுக்க.

3. What is meant by whole life policy?
   ஆயுள் முழுமைக் காப்பீடு பற்றி அறிவது என்ன?

4. What do you mean by insurable interest?
   காப்பீடு பெறுதல்கள் பற்றி நீவிர் அறிவது என்ன?

5. State any two code of conduct for agent.
   காப்பீட்டு முகவருக்கான நடத்தைக் குறியீட்டில் ஏதேனும் இரண்டைக் கூறுக.

6. What is general insurance?
   பொது காப்பீடு என்றால் என்ன?

7. What is meant by insurance claim?
காப்பீட்டு கோருரிமை பற்றி அறிவது என்ன?

8. What is meant by proposal form?
முன் மொழிவு படிவம் பற்றி அறிவது என்ன?

9. What do you mean by optimal pricing?
உத்தம விலையிடுதல் பற்றி நீவிர் அறிவது என்ன?

10. What is over insurance?
அதிகமான காப்பீடு என்றால் என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL the questions, choosing either (a) or (b).

11. (a) What are the various principles of risk insurance?
இடர் காப்பீட்டின் பல்வேறு கொள்கைகள் யாவை?

Or

(b) What are the challenges faced by insurance sector?
காப்பீட்டு துறை சந்திக்ககூடிய சவால்கள் யாவை?

12. (a) What are the procedures for affecting a Life insurance policy?
ஆயுள் காப்பீட்டை நடைமுறைபடுத்துவதற்கான முக்கிய வழிமுறைகளை விவாதிக்கவும்.

Or

(b) Distinguish between fire insurance and marine insurance.
தீ காப்பீடு மற்றும் கடல்சார் காப்பீட்டை வேறுபடுத்துக.

13. (a) Explain the different types of liabilities insurance.

பொறுப்புகள் காப்பீட்டின் வெவ்வேறு வகைகளை விளக்குக.

Or

(b) What are the factors influencing new product development in insurance?

காப்பீட்டில் புதிய பொருள் முன்னேற்றத்தை தூண்டக்கூடிய காரணிகள் யாவை?

14. (a) Briefly explain the various factors that affect the underwriting process.

ஒப்புறுதி செயல்முறையை பாதிக்கும் பல்வேறு காரணிகளை சுருக்கமாக விளக்குக.

Or

(b) Enumerate the stages for settlement of claim.

கோருரிமை தீர்க்கப்படுவதற்குரிய நிலைகளை எடுத்துரைக்க.

15. (a) What are the principles of insurance pricing?

காப்பீட்டு விலையிடலின் கொள்கைள் யாவை?

Or

(b) What are the features of reinsurance?

மறுகாப்பீட்டின் அம்சங்கள் யாவை?

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Discuss the privatization of insurance sector in India in detail.

இந்தியாவில் காப்பீட்டு துறையை தனியார்மயமாக்குதல் பற்றி விவாதிக்க.

17. Explain the various types of life policies.

ஆயுள் காப்பீட்டு திட்டாவணத்தின் பல்வேறு வகைகளை விவரிக்க.

18. Elaborate the various functions of an insurance agent.

ஒரு காப்பீட்டு முகவருடைய பணிகளை விளக்குக.

19. Discuss the procedure involved in death claim.

இறப்பு கோருரிமையிலுள்ள செயல்முறைகளை விவாதிக்க.

20. Discuss the importance of financial management in insurance companies.

காப்பீட்டு நிறுவனங்களின் நிதி மேலாண்மையின் முக்கியத்துவத்தை விவாதிக்க.

———————

D–4239

Sub. Code
10242/12542/ 12342/12842

DISTANCE EDUCATION

Common for B.Com./B.Com. (LE)/B.Com. (CA)/
B.Com. (CA) (LE) DEGREE EXAMINATION, MAY 2024.

Fourth Semester

BUSINESS STATISTICS

(CBCS 2018-19 Academic Year onwards)

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer ALL the questions.

1. What do you mean by Statistics?
புள்ளியியல் பற்றி நிவீர் அறிவது என்ன?

2. What is meant by Standard Deviation?
திட்டவிலக்கம் பற்றி அறிவது என்ன?

3. What is Probability?
நிகழ்தகவு என்றால் என்ன?

4. What do you mean by Addition theorem?
கூட்டல் தேற்றம் பற்றி நீவீர் அறிவது என்ன?

5. What do you mean by Sample?
மாதிரி பற்றி நீவீர் அறிவது என்ன?

6. What is meant by two tailed test?

இரண்டு வால் சோதனை பற்றி நீவீர் அறிவது என்ன?

7. What is Correlation?

உடன் தொடர்பு என்றால் என்ன?

8. Bring out any two uses of Regression analysis.

தொடர்பு போக்கு பகுப்பாய்வின் ஏதேனும் இரண்டு பயன்களைத் தருக.

9. What is Moving average?

நகரும் சராசரி என்றால் என்ன?

10. Define Index number.

குறியீட்டு எண்ணை வரையறுக்க.

PART B — (5 × 5 = 25 marks)

Answer ALL the questions, choosing either (a) or (b).

11. (a) State the various functions of statistics.

புள்ளியியலின் பல்வேறு பணிகளைக் கூறுக.

Or

(b) Find out the value of quartile deviation and its coefficient from the following data:

Roll No.	1	2	3	4	5	6	7
Marks	20	28	40	30	50	60	52

பின்வரும் விவரங்களிலிருந்து கால்மான விலக்கம் மற்றும் அதனுடைய கெழுவைக் கணக்கிடுக.

Roll No.	1	2	3	4	5	6	7
Marks	20	28	40	30	50	60	52

12. (a) A problem in statistics is given to three students A, B and C. Their chances of solving it are 1/2, 1/3 and 1/4 respectively. What is the probability that the problem will be solved?

புள்ளியியலின் ஒரு கணக்கானது A, B மற்றும் C ஆகிய மூன்று மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அவர்கள் அக்கணக்கை தீர்ப்பதற்கான வாய்ப்பு முறையே 1/2 , 1/3 மற்றும் 1/4 ஆகும். அக்கணக்கை தீர்ப்பதற்கான நிகழ்தகவு என்ன?

Or

(b) Two dice are thrown. Find the probability that

(i) The total of the numbers on the dice is 7

(ii) The total of the numbers on the dice is greater than 7

(iii) Both the dice show the same numbers

(iv) The total of the numbers on the dice is 13.

இரு பகடைகள் உருட்டப்பட்டன. பின்வருவனவற்றிற்கு நிகழ்தகவு கண்டறிக.

(i) பகடைகளின் மீதான எண்களின் மொத்தம் 7

(ii) பகடைகளின் மீதான எண்களின் மொத்தம் 7க்கும் அதிகம்

(iii) இரு பகடைகளும் ஒரே எண்ணை காண்பிக்கின்றன.

(iv) பகடைகளின் மீதான எண்களின் மொத்தம் 13

13. (a) A sample of 1000 students from Bombay university was taken and their average weight was found to be 112 lbs with a standard deviation of 20lbs. Could the mean weight of the students in the population be 120 pounds?

பாம்பே பல்கலைகழகத்திலிருந்து 1000 மாணவர்கள் மாதிரியாக எடுக்கப்பட்டனர். அவர்களின் சராசரி எடை 112 பவுண்ட் மற்றும் திட்ட விலக்கம் 20 பவுண்ட் ஆகும். மக்கள் தொகையில் மாணவர்களின் சராசரி எடை 120 பவுண்டுகளாக இருக்க முடியுமா?

Or

(b) Give the various applications of Chi-square test.

கை-சதுர சோதனையின் பல்வேறு பயன்பாடுகளை தருக.

14. (a) Find regression lines.

X	40	38	35	42	30
Y	30	35	40	36	29

தொடர்பு போக்கு கோடுகளை காண்க.

X	40	38	35	42	30
Y	30	35	40	36	29

Or

(b) What are the advantages of business forecasting?

வியாபார முன்னறிவிப்பின் நன்மைகள் யாவை?

15. (a) Compute the trend from the following by the method of least squares:

Year	2000	2001	2002	2003	2004
Population (in lakhs)	830	920	710	900	1690

குறைந்த வர்க்க முறையை பின்பற்றி பின்வரும் தகவல்களிலிருந்து போக்கை கணக்கிடுக.

ஆண்டு	2000	2001	2002	2003	2004
முக்கள் தொகை (இலட்சத்தில்)	830	920	710	900	1690

Or

(b) What are the uses of cost of living index?

வாழ்க்கைச் செலவு குறியீட்டெனுடைய பயன்கள் யாவை?

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. Scores obtained by two teams are as follows.

Team 'A'	Team 'B'
15	20
10	10
7	5
5	4
3	2
2	1
42	42

Calculate co-efficient of variation and state which team is more consistent.

இரண்டு குழுக்கள் பெற்ற புள்ளி விவரம் பின்வருமாறு.

குழு 'A'	குழு 'B'
15	20
10	10
7	5
5	4
3	2
2	1
42	42

மாறுபாட்டுக் கெழுவை கணக்கிட்டு எந்த குழுவானது மிகவும் நிலையாக விளையாடுகிறது என்பதையும் கூறுக.

17. A bag contains 5 red and 7 black balls. Find the probability that the first draw will give 3 red and second draw gives 2 black balls, when (a) balls are replaced after the first draw, (b) balls are not replaced after the first draw.

ஒரு பையில் 5 சிகப்பு மற்றும் 7 கருப்பு பந்தகளும் உள்ளன. முதல் தடவை பந்துகளை எடுக்கும் பொழுது 3 சிகப்பு பந்துகளும் மற்றும் இரண்டாம் தடவை பந்துகளை எடுக்கும் பொழுது 2 கருப்பு பந்துகளும் விழுவதற்கான நிகழ்தகவை பின்வரும் நிலைகளில் காண்க. (அ) முதல் தடகை பந்துகளை எடுத்த பிறகு திரும்பவைத்தால் (ஆ) முதல் தடவை பந்துகளை எடுத்த பிறகு திரும்ப வைக்காமலிந்தால்.

18. Two independent samples of 8 and 7 items respectively had the following values of the variables.

Sample I 9 11 13 11 15 9 12 14

Sample II 10 12 10 14 9 8 10 -

Do the estimates of population variance differ significantly.

முறையே 8 மற்றும் 7 உருப்புடிகளின் இரண்டு தன்னிச்சையான மாதிரிகளின் மாறிகளிலுள்ள மதிப்புகளானது பின்வருமாறு.

மாதிரி I 9 11 13 11 15 9 12 14

மாதிரி II 10 12 10 14 9 8 10 -

மக்கள் தொகை மாறுபாட்டின் மதிப்பீடுகள் கனிசமாக வேறுபடுகின்றனவா?

19. From the following data calculate Karl Pearson Co-efficient of correlation.

X	6	2	10	4	8
Y	9	11	?	8	7

Arithmetic means of X and Y series are 6 and 8 respectively.

பின்வரும் தகவல்களிலிருந்து காரல் பியர்ஸனின் உடன் தொடர்பு கெழுவைக் கணக்கிடுக.

X	6	2	10	4	8
Y	9	11	?	8	7

X மற்றும் Y தொடரின் கூட்டு சராசரி முறையே 6 மற்றும் 8 ஆகும்.

20. Compute the average seasonal movements for the time series given below.

Year	Quarterly Production			
	I	II	III	IV
1980	3.5	3.9	3.4	3.6
1981	3.5	4.1	3.7	4.0
1982	3.5	3.9	3.7	4.2
1983	4.0	4.6	3.8	4.5
1984	4.1	4.4	4.2	4.5

கீழே கொடுக்கப்பட்டுள்ள காலத் தொடர் வரிசைக்கு சராசரி பருவகால மாறுதல்களைக் கணக்கிடுக.

ஆண்டு	காலாண்டு உற்பத்தி			
	I	II	III	IV
1980	3.5	3.9	3.4	3.6
1981	3.5	4.1	3.7	4.0
1982	3.5	3.9	3.7	4.2
1983	4.0	4.6	3.8	4.5
1984	4.1	4.4	4.2	4.5

D–4240

Sub. Code
10243/12543

DISTANCE EDUCATION

B.Com./B.Com. (L.E.) DEGREE EXAMINATION, MAY 2024.

Fourth Semester

OFFICE MANAGEMENT

(CBCS 2018 – 2019 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL the questions.

1. What is open office?
திறந்த அலுவலகம் என்றால் என்ன?

2. What is office organization?
அலுவலக அமைப்பு என்றால் என்ன?

3. What is office system?
அலுவலக முறைமை என்றால் என்ன?

4. What is meant by office layout?
அலுவலக அமைப்பு பற்றி அறிவது என்ன?

5. What is meant by stationery?
எழுதுபொருள் பற்றி அறிவது என்ன?

6. State any two principles of form designing.
படிவ வடிவமைத்தலின் ஏதேனும் இரண்டு கோட்பாடுகளை தருக.

7. What do you mean by horizontal filing system?

கிடைநிலைக் கோப்பிடுதல் முறை பற்றி நீவிர் அறிவது என்ன?

8. State any two advantages of written communication.

எழுத்து மூலமான தகவல் தொடர்பின் ஏதேனும் இரண்டு நன்மைகளை கூறுக.

9. What is outward mail?

வெளிச் செல்லும் அஞ்சல் என்றால் என்ன?

10. What is punched card machine?

துளையிடப்பட்ட கார்டு இயந்திரம் என்றால் என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL questions, choosing either (a) or (b).

11. (a) Explain the role of office manager in modern office.

நவீன அலுவலகத்தில் அலுவலக மேலாளரின் பங்கை எடுத்துரைக்க.

Or

(b) What are importance of office organisation?

அலுவலக அமைப்பின் முக்கியத்துவங்கள் யாவை?

12. (a) Write any five advantages of good office layout.

நல்ல அலுவலக தளவமைப்பின் ஏதேனும் ஐந்து நன்மைகளை எழுதுக.

Or

(b) What factors would you take account in designing chairs?

நாற்காலிகளை வடிவமைப்பதில் நீங்கள் என்னென்ன காரணிகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்?

13. (a) Bring out the reasons for measuring office work.

அலுவலக வேலைகளை அளவிடுவதற்கான காரணங்களை தருக.

Or

(b) What are the principles of form designing?

படிவ வடிவமைத்தலின் கோட்பாடுகள் என்ன?

14. (a) Differentiate horizontal filing system and vertical filing system.

கிடைநிலைக் கோப்பிடுதல் முறைக்கும் செங்குத்துக் கோப்பிடுதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகளை தருக.

Or

(b) State the advantages and disadvantages of centralized correspondence.

மையப்படுத்தப்பட்ட கடிதபரிமாற்றத்தின் நன்மைகள் மற்றும் தீமைகளைக் குறிப்பிடவும்.

15. (a) Bring out the importance of communication.

தகவல் தொடர்பின் முக்கியத்துவங்களை தருக.

Or

(b) Write short notes on :

(i) Addressing machine

(ii) Electronic data processing

சிறு குறிப்பு வரைக.

(i) உரையாற்றும் இயந்திரம்

(ii) மின்னணு தரவு செயலாக்கம்

SECTION C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

16. Explain the various steps of office organization.

அலுவலக அமைப்பின் பல்வேறு படிகளை விளக்குக.

17. Discuss the various factors which influence the physical environment of an office.

ஒரு அலுவலகத்தின் உள் அமைப்புச் சார்ந்த சுற்றுச்சூழலை தூண்டும் பல்வேறு காரணிகளை விவாதிக்க.

18. Describe the different types of office forms.

அலுவலக படிவங்களின் பல்வேறு வகைகளை விளக்குக.

19. Explain the various steps in the process of communication.

தகவல் தொடர்பு செயல்பாட்டில் உள்ள பல்வேறு படிகளை விளக்குக.

20. State the principles of office machines and equipment selection.

அலுவலக இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான கொள்கைகளைக் குறிப்பிடவும்.

———————

D–4241

Sub. Code
10244/12544/ 12344/12844

DISTANCE EDUCATION

Common For B.Com./B.Com.(L.E)/B.Com.(CA)/
B.Com.(CA)(L.E) DEGREE EXAMINATION, MAY 2024.

Fourth Semester

MANAGEMENT ACCOUNTING

(CBCS 2018 – 19 Academic Year Onwards)

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer ALL the questions.

1. Define Management accounting.
   மேலாண்மை கணக்கியலை வரையறுக்க.

2. State any two objectives of Budgetary Control.
   திட்டபட்டியல் கட்டுப்பாட்டின் ஏதேனும் இரண்டு நோக்கங்களை கூறுக.

3. What is Sales Variance?
   விற்பனை மாறுபாடு என்றால் என்ன?

4. What is meant by Margin of safety?
   பாதுகாப்பு எல்லை பற்றி அறிவது என்ன?

5. What is Financial Statement?
   நிதிநிலை அறிக்கை என்றால் என்ன?

6. What is Operating ratio?
   செயல்பாட்டு விகிதம் என்றால் என்ன?

7. What is working capital?
   நடைமுறை மூலதனம் என்றால் என்ன?

8. State any two limitations of Cash Flow Statement.
ரொக்க ஓட்ட அறிக்கையின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளை கூறுக.

9. What is capital budgeting?
மூலதன திட்டமிடுதல் என்றால் என்ன?

10. What do you mean by inflation accounting?
பணவீக்க கணக்கியல் பற்றி நீவிர் அறிவது என்ன?

SECTION B — ($5 \times 5 = 25$ marks)

Answer ALL the questions, choosing either (a) or (b).

11. (a) What are the features of management accounting.
மேலாண்மை கணக்கியலின் அம்சங்கள் யாவை?

Or

(b) From the following particulars prepare the Raw Materials Purchase Budget for October 2013:

	Materials (in units)		
	A	B	C
Estimated stock on 01.10.2013	16,000	6,000	24,000
Estimated stock on 31.10.2013	20,000	8,000	28,000
Estimated consumption	1,20,000	44,000	1,32,000
Standard price per unit (paise)	25	05	15

	D	E	F
Estimated stock on 01.10.2013	2,000	14,000	28,000
Estimated stock on 31.10.2013	4,000	16,000	32,000
Estimated consumption	36,000	88,000	1,72,000
Standard price per unit (paise)	10	20	30

பின்வரும் விபரங்களிலிருந்து மூலப்பொருள் கொள்முதல் திட்டத்தை அக்டோபர் 2013-ல் தயாரிக்க.

மூலப்பொருள்கள்

(அலகுகளில்)

	A	B	C
01.10.2013-ல் தீர்மானிக்கப்பட்ட சரக்கிருப்பு	16,000	6,000	24,000
31.10.2013-ல் தீர்மானிக்கப்பட்ட சரக்கிருப்பு	20,000	8,000	28,000
தீர்மானிக்கப்பட்ட நுகர்வு	1,20,000	44,000	1,32,000
ஓரலகிற்கான நிர்ணய விலை (பைசா)	25	05	15

	D	E	F
01.10.2013-ல் தீர்மானிக்கப்பட்ட சரக்கிருப்பு	2,000	14,000	28,000
31.10.2013-ல் தீர்மானிக்கப்பட்ட சரக்கிருப்பு	4,000	16,000	32,000
தீர்மானிக்கப்பட்ட நுகர்வு	36,000	88,000	1,72,000
ஓரலகிற்கான நிர்ணய விலை (பைசா)	10	20	30

12. (a) ABC Ltd had budgeted the sales for December 2018.

Product A : 800 units @ Rs.40 per unit

Product B: 1000 units @ Rs.60 per unit

The actual sales were:

Product A: 900 units @ Rs.45 per unit

Product B: 1100 units @ Rs.70 per unit

The cost per unit of A and B was Rs.35 Rs.50 respectively.

Calculate sales variance.

ABC நிறுமம் டிசம்பர் 2018 அன்றைய திட்டமிட்ட விற்பனை பின்வருமாறு

பொருள் A - 800 அலகுகள் - அலகு ஒன்றுக்கு ரூ.40 வீதம்

பொருள் B - 1000 அலகுகள் - அலகு ஒன்றுக்கு ரூ.60 வீதம்

உண்மையான விற்பனை பின்வருமாறு:

பொருள் A - 900 அலகுகள் - அலகு ஒன்றுக்கு ரூ.45 வீதம்

பொருள் B - 1100 அலகுகள் - அலகு ஒன்றுக்கு ரூ.70 வீதம்

ஓர் அலகிற்கான A மற்றும் B பொருளின் அடக்கவிலை ரூ.35 மற்றும் ரூ.50 ஆகும்.

விற்பனை மாறுபாட்டை காண்க.

Or

(b) From the following particulars find out the Break Even Point. What will be the selling price per unit if Break Even Point is to be brought down to 9,000 units?

	Rs.
Variable cost per unit	75
Fixed expenses	2,70,000
Selling price per unit	100

பின்வரும் விவரங்களிலிருந்து இலாப நட்டமற்ற புள்ளியை கணக்கிடுக. மேலும் இலாப நட்டமற்ற புள்ளியானது 9,000 அலகிற்கு குறையும் பொழுது ஒரு அலகிற்கான விற்பனை விலை என்ன?

	ரூ.
ஒரு அலகிற்கான மாறும் செலவு	75
நிலையான செலவினங்கள்	2,70,000
ஒரு அலகிற்கான விற்பனை விலை	100

13. (a) Compare analysis and interpretation of financial statements.

நிதிநிலை அறிக்கையினுடைய பகுப்பாய்வு மற்றும் விளக்கவுரையை ஒப்பிடுக.

Or

(b) Explain the following:

(i) Debt-Equity Ratio

(ii) Operating Ratio

(iii) Acid Test Ratio

(iv) Current Ratio.

பின்வருபவனவற்றை விளக்குக:

(i) கடன்-பொது விகிதம்

(ii) செயல்பாட்டு விகிதம்

(iii) அமில சோதனை விகிதம்

(iv) நடப்பு விகிதம்.

14. (a) From the following information calculate funds from operations.

	2016 (Rs.)	2017 (Rs.)
Profit and loss account	25,000	40,000
General reserve	40,000	45,000
Goodwill	7,000	4,000
Preliminary expenses	5,000	3,000
Provision for depreciation on machinery	10,000	12,000
Refund of Tax	–	5,000

பின்வரும் தகவல்களிலிருந்து செயல்பாடுகளிலிருந்து கிடைக்ககும் நிதியைக் கணக்கிடுக.

	2016 (ரூ.)	2017 (ரூ.)
இலாப நட்ட கணக்கு	25,000	40,000
பொதுக் காப்பு	40,000	45,000
நற்பெயர்	7,000	4,000
தொடக்க செலவினங்கள்	5,000	3,000
இயந்திரம் மீதான தேய்மான ஒதுக்கு	10,000	12,000
வருமானவரி திருப்பியது	–	5,000

Or

(b) Jain Ltd made a net profit of Rs. 1,00,000 for the year ended 31st December 2016 after verifying the following information.

	Rs.
Loss on sale of Machinery	10,000
Depreciation on Buildings	4,000
Depreciation on Machinery	5,000
Preliminary expenses written off	5,000
Provision for Taxation	10,000
Goodwill written off	5,000
Profit on sale of Buildings	8,000

Calculate cash from operations.

கீழ்க்கண்ட விபரங்களை ஆய்வு செய்த பின் 31, டிசம்பர் 2016-த்துடன் முடிந்த ஆண்டின் ஜெயின் லிமிடெட் ஈட்டிய நிகர லாபம் ரூ.1,00,000

	ரூ.
இயந்திர விற்பனையில் ஏற்பட்ட நட்டம்	10,000
கட்டிடத்தின் மேல் தேய்மானம்	4,000
இயந்திரத்தின் மீது தேய்மானம்	5,000
தொடக்க நிலை செலவு போக்கெழுதியது	5,000
வரி ஒதுக்கீடு	10,000
நற்பெயர் போக்கெழுதியது	5,000
கட்டிட விற்பனையின் மேல் லாபம்	8,000

செயல்பாட்டிலிருந்து பெற்ற ரொக்கத்தை கணக்கிடுக.

15. (a) Examine the various methods of evaluating capital budgeting proposals.

மூலதன திட்டமிடுதல் பரிந்துரையை மதிப்பிடும் பல்வேறு முறைகளை ஆராய்க.

Or

(b) Briefly explain the methods of transfer pricing.

பரிமாற்ற விலையின் முறைகளை சுருக்கமாக விளக்குக.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

16. A newly started company wishes to prepare cash budget from January. Prepare Cash Budget for the first six months from the following estimated revenue and expenses.

Month	Total sales Rs.	Materials Rs.	Wages Rs.	Overheads Production Rs.	Overheads Selling and Distribution Rs.
January	20,000	20,000	4,000	3,200	800
February	22,000	14,000	4,400	3,300	900
March	28,000	14,000	4,600	3,400	900
April	36,000	22,000	4,600	3,500	1,000
May	30,000	20,000	4,000	3,200	900
June	40,000	25,000	5,000	3,600	1,200

Cash balance on 1st January was Rs. 10,000. A new machinery is to be installed at Rs.20,000on credit, to be repaid by two equal installments in March and April. Sales commission @5% on total sales is to be paid within a month of following actual sales. Rs. 10,000 being the amount of 2nd call may be received in March. Share premium amounting toRs.2,000 is also obtainable with the 2nd call.

Period of credit allowed by suppliers – 2 months

Period of credit allowed to customers – 1 month

Delay in payment of overheads – 1 month

Delay in payment of wages – ½ month

Assume cash sales to be 50% of total sales.

ஒரு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நிறுமமானது ஜனவரி மாதத்தில் இருந்து ரொக்க திட்டப்பட்டியலை தயாரிக்க விரும்பியது. கீழ்க்கண்ட எதிர்பார்க்கப்படும் வருவாய் மற்றும் செலவினங்களிலிருந்து முதல் ஆறு மாதகாலத்திற்கு ரொக்க திட்டப்பட்டியலை தயாரிக்க.

		மேற்செலவுகள்			
மாதம்	மொத்த விற்பனை ரூ.	மூலப்பொருள்கள் ரூ.	கூலி ரூ.	உற்பத்தி ரூ.	விற்பனை மற்றும் பகிர்ந்தளிப்பு
ஜனவரி	20,000	20,000	4,000	3,200	800
பிப்ரவரி	22,000	14,000	4,400	3,300	900
மார்ச்	28,000	14,000	4,600	3,400	900
ஏப்ரல்	36,000	22,000	4,600	3,500	1,000
மே	30,000	20,000	4,000	3,200	900
ஜூன்	40,000	25,000	5,000	3,600	1,200

ஜனவரி 1 அன்று கையிலுள்ள ரொக்க இருப்பு ரூ.10,000, ரூ.20,000 பெறுமான ஒரு புதிய இயந்திரம் கடனுக்கு வாங்கி நிறுவப்பட்டது. அத்தொகையானது மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் இரு சமதவணைகளாக செலுத்த வேண்டும். மொத்த விற்பனையில் 5% விற்பனை கழிவு கணக்கிடப்பட்டு விற்பனை நடந்த அடுத்த மாதத்தில் செலுத்த வேண்டும். ரூ.10,000 பெறுமான இரண்டாம் அழைப்பு தொகை மார்ச் மாதத்தில் பெற வேண்டும். இந்த இரண்டாம் அழைப்பு தொகையோடு ரூ.2,000 பெறுமான பங்கு முனைமமும் பெற வேண்டும்.

சரக்களித்தோரால் வழங்கப்பட்ட கடன் காலம் – 2 மாதங்கள்

வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கடன் காலம் – 1 மாதம்

மேற்செலவுகளை செலுத்துவதற்கான காலம் – 1 மாதம் கழித்து

கூலியை செலுத்துவதற்கான காலம் – ½ மாதம் கழித்து

மொத்த விற்பனையில் 50% ரொக்க விற்பனை என கொள்க.

17. From the following particulars relating to three materials X, Y and Z used in a product compute material variances.

	Standard			Actual		
	Qty. Kg.	Unit Price Rs.	Total Rs.	Qty. Kg.	Unit Price Rs.	Total Rs.
X	20	2	40	10	3	30
Y	40	3	120	20	6	120
Z	40	6	240	30	5	150
	100		400	60		300

ஒரு பொருளில் பயன்படுத்தக்கூடிய X,Y மற்றும் Z ஆகிய மூன்று மூலப் பொருட்களின் தகவல்கள் பின்வருமாறு: அதிலிருந்து மூலப்பொருள் மாறுபாட்டை கணக்கிடுக.

	நிலையானது			உண்மையானது		
	அளவு (கி.கி)	அலகு விலை (ரூ.)	மொத்தம் (ரூ.)	அளவு (கி.கி)	அலகு விலை (ரூ.)	மொத்தம் (ரூ.)
X	20	2	40	10	3	30
Y	40	3	120	20	6	120
Z	40	6	240	30	5	150
	100		400	60		300

18. From the following particulars of X Company Calculate:

(a) Sales

(b) Debtors

(c) Closing Stock

(d) Creditors

Debtors velocity	3 months	Creditors velocity	2 months
Stock turnover ratio	8 times	Gross profit ratio	25%

Gross profit for the year was Rs.4,00,000. Closing stock was Rs. 10,000 more than the opening stock.

பின்வரும் தகவல்களானது X நிறுமத்திற்குரியது. இவற்றிலிருந்து பின்வருவனவற்றை கணக்கிடுக.

(அ) விற்பனை

(ஆ) கடனாளிகள்

(இ) இறுதிச் சரக்கிருப்பு

(ஈ) கடனீந்தோர்கள்

